www.tamilarangam.net

# தேசம்

சர்வதேச தமிழ் சஞ்சிகை □ இதழ் 7 □ மார்ச் 2002 □ ISSN 1471 - 8770 □ விலை £1.25, EUR 2.00

யுத்த சூழலில் மருத்துவம்
தாயகத்தில் இருந்து - **Dr N** சிவராஜா

## நோய்வாய்ப்பட்ட வடக்கு, கிழக்கு

மொழியியல் ஆய்வு - சிறப்புக் கட்டுரை
**Dr** பொன் சத்தியநாதன் (அவுஸ்திரேலியா)

## தமிங்கிலம் v தமிழ்

அரசியல் விமர்சனம்
பேராசிரியர் கோபன் மகாதேவா

## போர் நிறுத்தம்

இது ஒரு உண்மைக் கதை

## சிறையில் ஒரு குரல்

## கைவிடப்படுகிறது தமிழீழம்




6200 தமிழர்கள்

## அரசியல் தஞ்சம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசம் வெளியீடு

தலைவர்
சமூக மருத்துவம்
யாழ் பல்கலைக்கழகம்

## Dr என் சிவராஜாவின்

### Health Care for North - East Sri Lanka
### Reflection for the future

விலை £2 (தபாற் செலவு உட்பட)

நூலகவியலாளர்

## என் செல்வராஜாவின்

# யாழ்ப்பாணப் பொது நூலகம்

### ஒரு வரலாற்றுத் தொகுப்பு

விலை £6 (தபாற் செலவு உட்பட)

விமல் குழந்தைவேலின் — நாவல்

# மண்ணும் மல்லிகையும்

விலை £3 (தபாற் செலவு உட்பட)

ஞானகுமாரன் — கவிதைத்தொகுதி

# முகமறியா வீரர்களுக்காக

விலை £3 (தபாற் செலவு உட்பட)

மேலுள்ளவற்றின் பிரதிகளைப் பெற விரும்புபவர்கள் உங்கள் பெயர், முகவரியை தெளிவாக குறிப்பிட்டு கீழுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

THESAM, BO Pox 35806, London E11 3JX

# இவர்கள்

புலம் பெயர் தேசத்தில் வாழும் சமூக அக்கறை உடைய சமூகத்துக்கு பெருமை சேர்க்கும் படைப்பாளிகளையும் சேவை செய்பவர்களையும் சாதனையாளர்களையும் அறிமுகப்படுத்தும் பகுதி.

சமூகம், கல்வி, அரசியல், விளையாட்டு, கலை, இலக்கியம், .............. என பல்வேறு துறைகளிலும் தமக்கும் சமூகத்துக்கும் பெருமை சேர்ப்பவர்களை நீங்கள் அறிந்து இருந்தால் எமக்கு தெரியப்படுத்தவும்.

அருகில் உள்ள விபரங்களை எமக்கு அறியத்தந்தால் நாம் அவர்களுடன் தொடர்புகளை மேற்கொள்ள உதவியாக இருக்கும். உங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி.

முழுப்பெயர் :

குறிப்பான துறை :

அடைந்த வெற்றி :

வயது :

தொ.இல :

வாழும் நாடு :

www.tamilarangam.net



# "யுத்த நிறுத்தம்" வேண்டாம் யுத்தத்தை நிறுத்துங்கள்

தை பிறப்புடன் சமாதானத்துக்கான எதிர்பார்ப்புகளும் பேச்சுவார்த்தைக்கான முனைப்புகளும் தென்படுவது இலங்கை அரசியலைப் பொறுத்த வரை புளித்துப் போன விடயங்கள். சமாதானத்துக்குத் தாங்கள் எதிரானவர்கள் அல்ல என்பதைக் காட்டிக் கொள்வதில் சம்பந்தப்பட்ட இரு தரப்புமே சளைத்தவர்கள் அல்ல. சர்வதேசத்துக்கு மட்டும் தாங்கள் சமாதனப் பிரியர்கள் எனக் காட்டிக் கொள்ளும் இவர்களை மக்கள் சமாதானம் வந்துவிட வேண்டும் என்பதற்காக நம்புகிறார்கள்.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை நம்பிக்கை மட்டுமே வாழ்க்கை. ஆரம்பத்தில் இயக்கங்கள் ஒன்றுபட்டு தமிழீழத்தைப் பெறுவார்கள் என நம்பினார்கள். பின்னர் இந்தியா தலையிட்டு பிரச்சினையைத் தீர்க்கும் என நம்பினார்கள். ஜனாதிபதி சந்திரிகா ஒரு அரசியல் தீர்வை ஏற்படுத்துவார் என நம்பினார்கள். இப்போது மீண்டும் ஒரு முறை நம்புகிறார்கள்.

வெற்றி காண முடியாத ஒரு உள்நாட்டு யுத்தத்தை இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் கடந்த 25 ஆண்டுகளாக நடத்தி வருகின்றனர். இந்த வரலாற்றிலும் பார்க்க நீண்ட யுத்த வரலாற்றைக் கொண்ட வட அயர்லாந்தும்—பிரித்தானியாவும் பாலஸ்தீனமும்—இஸ்ரேலும் தமது இராணுவ யுத்திகளால் எதனையும் சாதித்து விடவில்லை.

இலங்கை இனப்பிரச்சினை இராணுவரீதியாக தீர்க்கப்பட முடியாது என்பது இரு தரப்பிலும் உள்ள மேல்மட்ட தலைமைகளால் உணரப்படுகிறது. ஆனால் இதனை மக்களிடம் வெளிப்படுத்தினால் அது அரசியல் தற்கொலையாக அமைந்துவிடும் என அவர்கள் பயப்படுகின்றனர். மேலும் இலங்கை பாராளு மன்றத்தில் உறுதியான அரசாங்கம் கிடையாது. அதனால் நிரந்தர தீர்வு என்பது அண்மைக் காலத்தில் சாத்தியமில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதி சந்திரிகாவும் திரைமறைவில் அரசியல் பலப்பரீட்சையில் இறங்கி இருக்கின்றனர். இந்த பலப்பரீட்சைக்குப் பின் இலங்கையில் ஒரு உறுதியான அரசாங்கம் அமைந்தாலேயே பேச்சுவார்த்தை இனப்பிரச்சனைக்குத் தீர்வை நோக்கியதாக இருக்கும். ஒரே கட்சியிடம் அதிகாரம் இருந்தபோதே இப்பிரச்சினைக்கு தீர்வு காண சுதந்திரக் கட்சியோ, ஐக்கிய தேசியக் கட்சியோ முன்வரவில்லை. இப்போது இரு கட்சிகளுமே அதிகாரத்தைப் பங்கு போட்டுப் பலப்பரீட்சையில் இறங்கி இருக்கின்றன. இதில் பாராளுமன்றம் கலைக்கப்படும் அல்லது ஜனாதிபதி சந்திரிகா பதவியில் இருந்து அகற்றப்படுவார். அரசியல் கணக்கின் படி தென்னிலங்கை அரசியல் பதவிக்காலம் முடியும் வரை நீடிக்காது.

இதற்கிடையே தாயகத்தில் வாழும் தமிழ் மக்களும் அவர்களுடன் வாழும் சிறுபான்மையினரும் குறிப்பாக முஸ்லீம் சமூகத்தினரும் சர்வதேச சமூகம் ஏற்றுக் கொள்ளக் கூடிய சமாதானத் திட்டத்தை தயாரித்து அதன் அடிப்படையில் பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் தயாராக வேண்டும். சமாதானத்தை நிஜப்படுத்தும் வகையில் போராட்ட வடிவங்களை மாற்றி தாயகத்தில் யுத்தத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

*தேசம் பற்றி*

பிரதம ஆசிரியர் - த ஜெயபாலன்
(0044) (0)79 0985 2418

நிர்வாக ஆசிரியர் - என் செல்வராஜா
( நூலகவியலாளர் )
(0044) (0)15 8270 3786

ஆசிரியர் குழு

தொழில்நுட்ப உதவி : எஸ் கௌதமன்
கணணியாக்கம் : ஜெ ஸ்ரீரஜனி

THESAM
P.O.Box 35806, London, E11 3JX, UK
Tel : 079 0985 2418

ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நோய்வாய்ப்பட்ட வடக்கு கிழக்கு





**Dr** என் சிவராஜா
தலைவர்
சமூக மருத்துவ பிரிவு
யாழ் பல்கலைக்கழகம்

வடக்கு கிழக்கு பகுதிகளின் சுகாதார நிலை மக்கள் இடப்பெயர்வு, சமூக, பொருளாதார கட்டுமானங்களின் சீரழிவு, போக்குவரத்து வசதி இன்மை, உணவு தட்டுப்பாடு, குறைந்த வருவாய் ஆனால் அதிகப்படியான விதவைகள், அனாதைகள் என மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளது.

இலங்கையின் சுகாதார சேவைகள் வளர்முக நாடுகளுக்கு ஒரு முன் உதாரணமாக அமைகிறது. இந்நாடு சுகாதார சேவைகளுக்கு குறைந்த அளவில் செலவு செய்து கூடிய வருவாயுள்ள நாடுகளைக் காட்டிலும் நிறைந்த பலனைப் பெறுகிறது. 1994ல் US $800யை தலா வருமானமாக கொண்டிருந்த இலங்கையானது கொரியா, தாய்லாந்து, மலேசியா ஆகிய நாடுகளைக் காட்டிலும் உயர்வான ஆயுள் காலத்தைக் கொண்டிருந்தது. மேலும் கொரியாவிலும் பார்க்க 10 வீதம் குறைவான தலா வருமானத்தைக் கொண்டு இருந்த போதும் குழந்தை இறப்பு வீதம் குறைவாகவே இருந்தது.

இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதி மக்கள் பல்வேறு சமயங்களில் இடப்பெயர்வுக்கு உள்ளாகினர். இதனால் மக்கள் தொகை பரம்பல் தொடர்ச்சியாக மாற்றத்துக்கு உள்ளாகிக் கொண்டு இருந்தது. இதன் காரணமாக வடக்கு கிழக்கு பகுதிகளின் மக்கள் தொகை பரம்பல் பற்றிய விபரங்களை பதிவு செய்ய இயலவில்லை.

1995 இடப்பெயர்வுக்குப் பின்னர் யாழ் மாவட்டத்தின் சனத்தொகை வீழ்ச்சி அடைந்து இருப்பதையும் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்டங்களின் சனத்தொகை அதிகரித்து இருப்பதையும் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. (தேசம், இதழ் 5, பக்கம் 6). ஆயினும் வடக்கு கிழக்கு மக்களின் சனத்தொகை 14 வீதமாக (2.6 மில்லியன்) மாறாமலேயே உள்ளது.

திருமலை மாவட்டத்தில் சுகாதாரம் போசாக்கு பற்றிய அடிப்படை கல்வியின் (Ines Reinhard & Danela Kraemer, 1999) படி தமிழ் மக்கள் அதிகம் வாழும் விடுவிக்கப்படாத பிரதேசங்களில், குழந்தைகள் உடைய தந்தையர் 61%, தாய்மார் 66% எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக உள்ளனர். ஆனால் அதே மாவட்டத்தில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மற்றைய சமூகத்தவர்களில் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் 13-15% உள்ளனர். 1994 ல் வடக்கு, கிழக்கு தவிர்ந்த இலங்கையின் ஏனைய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சமூக ஆய்வுப்படி 90.1% கல்வியறிவு உடையவர்களாக இருந்தனர். நுவரெலியா மாவட்டமே ஆகக் குறைந்த 77% கல்வி அறிவைக் கொண்டு இருந்தது.

சுகாதார கட்டுமானங்கள் உடைக்கப்பட்டது. இராணுவ நடவடிக்கைகள் காரணமாக குண்டுகளால் மருத்துவமனைகள் உடைக்கப்பட்டது அல்லது கைவிடப்பட்டது (அம்பாறை மாவட்டத்தில் உள்ள மத்திய முகாம்). அக்கரைப்பற்று, திருக்கோயில்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மருத்துவமனைகள் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப் பட்டது. இன்னும் சில மருத்துவமனைகள் இராணுவ முகாம்கள் போன்று தாக்குதல் இலக்காக உள்ளன. இம் மருத்துவ மனைகளுக்கு அண்மையாக தாக்குதல் தளபாடங்கள் பொருத்தப்பட்டு உள்ளது. இதனால் சில மருத்துவமனைகள் மூடப்பட வேண்டிய சூழ்நிலை உருவானது. இது இயங்கிக் கொண்டு இருக்கும் மருத்துவ மனைகளுக்கு மேலும் சுமையை ஏற்றியது. அத்துடன் கீழ் மட்டத்திலும் நிபுணத்துவ மட்டத்தலும் பாரிய மனிதவள பற்றாக்குறையும் காணப்படுகிறது.

(தேசம் இதழ் 4ல் - வடக்கு கிழக்கு பகுதி சிறுவர்களின் போசாக்கு நிலை பற்றிய விரிவான கட்டுரை தாய்மாரும் குழந்தைகளும் தமது இறுதி நாட்களை எண்ணுகின்றனர் - என்ற தலைப்பில் வெளிவந்து உள்ளது. அதனால் இங்கு அது பற்றி ஆராயப்படவில்லை.)

## பரவும் நோய்கள் :

அனைத்து நாடுகளிலும் தொற்றும் நோய்கள் பெரும் சுகாதாரப் பிரச்சினையாக உள்ளது. அபிவிருத்தி மற்றும் வளங்கள் காரணமாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் தொற்று நோய் சம்பவங்கள் குறைந்து கொண்டு வர ஆரம்பித்து உள்ளது. ஆனால் இதய நோய் போன்ற தொற்றா நோய்கள் அதிகரித்துச் செல்கிறது. ஆயினும் இலங்கையில் தொற்றுநோய்கள் இன்னமும் காணப்படுகிறது. தொற்றாநோய்கள் அதிகரித்துச் செல்கிறது.

வயிற்றோட்டம், ரியூபோர் குளோசிஸ் போன்ற தொற்று நோய்கள் வடக்கு, கிழக்கு பகுதிகளில் அதிகமாக ஏற்படுகிறது. கழிப்பிட வசதி இன்மை, சுகாதாரமான நீர் வசதியின்மை, வீட்டு வசதியின்மை, போசாக்கின்மை ஆகிய காரணிகள் இத்தொற்று நோய்களுக்கு காரணமாக இருக்கிறன. யாழ்மாவட்டத்தில் 45% மக்கள் தொகைக்கு கழிப்பிட வசதியில்லை. மட்டக்களப்பு மாவட்டமே இதனால் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. இங்கு 82.7% மக்களுக்கு கழிப்பிட வசதியில்லை. யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்பினாலும் அழிவினாலும் இந்நிலை ஏற்பட்டு இருக்கிறது. தற்போது கட்டுமானப் பொருட்கள் பெறப்படுவதற்கான வாய்ப்பு இல்லாத படியால் பாதிக்கப்பட்ட அல்லது அழிக்கப்பட்டவற்றை மீளக்கட்ட முடியாததால், இந்நிலை மிகவும் மோசமடைந்து உள்ளது.

வயிற்றோட்ட நோய் அதிகரிப்பதற்கு பெரிதும் காரணமாக இருப்பது மலசல கூட வசதயின்மையே. ஒருவர் நாளொன்றுக்கு 200கிராம் கழிவகற்றினால் 45,000 கிலோ கிராம் கழிவு யாழ் மண்ணை அடையும். இது இறுதியில் நீர் நிலைகளையே சென்றடையும். ஒரு சிறிதளவு கழிவு நீர்நிலையை அடைந்தாலும் அது அந்நீரை களங்கப்படுத்தி ஆபத்தானதாக்கி விடும். இக்கழிவு குழாய் கிணற்றில் உள்ள குழாயுடன் தொடர்பு பட்டால் இலகுவாக நீரை மாசுபடுத்தி விடும். இப்படியான பல மாசுபடுத்தப்பட்ட சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது.

இம்மாசுபடுத்தலுக்கு பொது மக்கள் மட்டும் காரணமல்ல. சுகாதார அமைச்சு பெரும் குற்றவாளியாக இருக்கிறது. வடக்கு, கிழக்கு பகுதிகளில் உள்ள பெரும்பாலான மருத்துவமனைகள் வயிற்றோட்ட நோயின் சேமிப்பிடமாக இருக்கிறது. வடக்கு, கிழக்கில் உள்ள எந்த மருத்துவமனையும் கழிவுகளை ஆபத்து இல்லாமல் அகற்றும் திட்டத்தை கொண்டிருக்கவில்லை. இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் தமது கழிவுகளை எந்த தொற்று நீக்கலும் இன்றி திறந்த கழிவுக் கால்வாய்க்குள் செலுத்த அனுமதிக்கப்படுவதாக அம்மருத்துவமனைகள் தெரிவிக்கின்றன. இதனால் சூழல் மாசடைவதுடன் நோய்களும் பரவுகின்றன.

யாழ் போதனா வைத்தியசாலை கழிவுகள் மருத்துவமனைக்கு வெளியே காணப்படும் திறந்த

## இலங்கை - சுகாதார தகவல்கள்

ஆயுட்காலம் பெண்களுக்கு 75.4 ஆண்டுகள்
ஆயுட்காலம் ஆண்களுக்கு 70.7 ஆண்டுகள்
தாய்மையின் போது தாயின் இறப்பு விகிதம் 2.3/10,000
உயிருடன் பிறக்கும் குழந்தையின் இறப்பு வீகிதம் 15.4/1,000
உயிருடன் பிறக்கும் குழந்தை 28 நாட்களுக்குள் இறக்கும் விகிதம் 12.9/1,000
1 - 4 வயது குழந்தைகளின் இறப்பு விகிதம் 0.9/1,000
மக்கள் தொகை வளர்ச்சி 1.2 %
கருவள விகிதம் 2.3/1,000
நோய்த் தடுப்பு அளவு 95 - 99 %
சராசரி சுகாதார கவனிப்பு மையங்கள் ஒவ்வொரு 1.4 கி.மீ காணப்படுகிறது.
இலவச அரச மேற்கத்தைய சுகாதார மையங்கள் ஒவ்வொரு 4.8கி.மீ காணப்படுகிறது.

***சீதனம் சம்பந்தப்பட்ட திருமணங்களை பகிஸ்கரியுங்கள்.***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கால்வாய்க்குள் தள்ளப்படுகிறது. இக்கால்வாயினால் செல்லும் கழிவு காற்றினில் நகர் முழுவதும் பரவி குடாவில் உள்ள நீரை அடைகிறது. அங்கிருந்தே மக்கள் தமது நாளாந்தத் தேவைக்கான இறால், நண்டு முதலிய கடலுணவுகளைப் பெறுகின்றனர். திருமலை மருத்துவமனை கழிவுகள் திருமலை கடற்கரையில் மக்கள் குளிக்கும் பகுதியில் இருந்து கால் மீற்றர் தூரத்தில் கடலினுள் விடப்படுகிறது. வவுனியா மருத்துவமனையுடைய கழிவு மருத்துவ மனைக்குப் பின்னுள்ள திறந்த வெட்டவெளியில் விடப்படுகிறது. மிகுந்த துர்நாற்றமுடைய ஆபத்தான நோய்க் கிருமிகளைக் கொண்ட மருத்துவமனை கழிவு சூழலை மாசுபடுத்துவதுடன் குடிநீர் நிலைகளையும் சென்றடைகிறது.

சுகாதார அமைச்சு சட்டப்படி கழிவகற்ற முறையான வசதியில்லாமல் தனியார் ஒருவர் வீடு கட்ட முடியாது. ஆனால் அரச மருத்துவமனைகள் இந்த விதிக்கு கட்டுப்படுவதாகத் தெரியவில்லை. குறிப்பிடத்தக்க மக்கள் பகுதியினர் தண்ணீர் வசதி உடையவர்களாக இருக்கின்றனர். ஆனால் அத் தண்ணீர் கழிவுகளால் மாசுபடுத்தப்படாமல் இருக்கின்றதா என்பது சந்தேகமே. இது விடயத்தில் மேலதிக ஆய்வுகள் தேவைப்படுகிறது.

## மலேரியா :

கடந்த காலத்தில் மலேரியா ஒரு பெரும் பிரச்சினையாக இருந்தது. 1995ல் வடக்கு, கிழக்கில் மலேரியாவால் பாதிக்கப்பட்டவர்கள் 31% இருந்தனர். 1998ல் இவ்வீதம் 62.3% இரட்டிப்படைந்தது. ஆனால் அண்மைய புள்ளிவிபரங்கள் யாழ்மாவட்டத்தில் மலேரியாவின் பாதிப்பு குறைவடைவதாகக் காட்டுகிறது. ஆனால் வடக்கு, கிழக்கின் ஏனைய மாவட்டங்களில் குறிப்பாக கிளிநொச்சி, மன்னார், வவுனியா மாவட்டங்களில் நிலைமை எப்படி என்று தெரியவில்லை.

## மனஉளைச்சல் :

மனஉளைச்சல் வகைகளில் ஒன்றான தற்கொலைச் சம்பவங்களில் மற்றைய நாடுகளைக் காட்டிலும் இலங்கை முன்னணியில் நிற்கிறது. இலங்கையில் வடக்கு, கிழக்கில் குறிப்பாக யாழ் மாவட்டம் மனஉளைச்சல் நோய்க்கும் தற்கொலைக்கும் பெயர்பெற்ற இடமாக இருந்து வருகிறது. வவுனியாவில் இடம்பெற்ற தற்கொலை முயற்சிகள் தற்கொலைச் சம்பவங்கள் பற்றிய ஆய்வு அபாய சமிஞைகளை அறிவிக்கின்றது. வவுனியா மருத்துவ மனையில் 2000 ஆண்டில் நிகழ்ந்த மரணங்களில் 12% தற்கொலை மரணங்கள் ஆகும். 117,000 மக்கள் தொகையை கொண்ட வவுனியாவில் 691 தற்கொலை முயற்சிகள் நடந்து இருக்கிறது. இதில் 62 பேர் தற்கொலை மரணத்தைத் தழுவி உள்ளனர். மேலும் தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட 103 பேர் அநுராதபுரம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இவர்களது இறுதி நிலவரம் ஆநுராதபுர மருத்துவமனையிலேயே பதிவு செய்யப்பட்டது. இதனையும் சேர்த்தால் வவுனியாவில் தற்கொலையால் இறந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகம் ஆகும். இடம்பெயர்ந்தவர்களிலும் சமூகநல மையங்களிலும் வாழ்பவர்களிடையே தற்கொலை வீதம் மிகவும் உயர்வாகக் காணப்படுகிறது.

## இடம் பெயர்ந்தவர்களுக்கு உதவி

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கும் இடம்பெயர்த 900,000 பேருக்கும் உதவுவதற்கு EUR 700,000 க்களை வழங்க இருக்கிறது. ECHO European Community Humanitarian aid Office வழங்கும் இவ்வுதவி சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினூடாக வழங்கப்படும். இந்த உதவியை பயன்படுத்தி கப்பல் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி மருத்துவ மற்றும் அத்திய அவசிய பொருட்கள் யாழ் அனுப்பப்பட இருக்கிறது. மேலும் மிகவும் பாதிக்கப்பட்ட நோயாளிகள் சிகிச்சைக்காக திருமலைக்குக் கொண்டுவரப்பட்டு கொழும்புக்கு அனுப்பப்பட இருப்பதாக சர்வதேச செஞ்சிலுவை சங்க பேச்சாளர் ஹர்சா குணவர்த்தனே தெரிவித்து இருக்கிறார்.

யாழ் மாவட்டத்துக்கான தரைபோக்குவரத்து தொடர்ந்தும் துண்டிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளது. விமானப் போக்குவரத்து மிகுந்த பண செலவானது. அதனால் கடல் வழி போக்குவரத்தே பயன்பாட்டில் உள்ளது. கொழும்பில் இருந்து 400 கி.மி (250 மைல்) தூரமுடைய யாழ் மாவட்டத்தை கடல் வழி மூலம் அடைய 3 நாட்கள் எடுக்கும்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவி வழங்கும் பிரிவின் தூதுக்குழு விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளது. இக்குழுவினர் இலங்கைக்கு மேலதிக உதவி வழங்குவது பற்றிய ஆலோசனைகளை வழங்குவார்கள்.

## புற்றுநோய் :

புற்றுநோய் தமிழர்கள் மத்தியில் குறிப்பாக வடக்கில் பெரும் பிரச்சினையாக உள்ளது. 1977 - 1997 பகுதியில் R G Panabokke யால் மேற்கொள் எப்பட்ட ஆய்வுகள் வடமாகாணத்தில் புற்றுநோய் அதிகமாகக் காணப்படுவதாக தெரிவிக்கிறது. அப்போதைய நிலவரப்படி 100,000 மக்களுக்கு 36.8 பேர் புற்றுநோய்க்கு உள்ளாகி இருந்தனர். அப்போது நாட்டின் ஏனைய பகுதிகளில் இதனால் பாதிக்கப்பட்டவர்கள் அரைவாசியிலும் குறைவாகக் காணப்பட்டனர். 100,000க்கு 16.4 பேர் நாட்டின் ஏனைய பாகங்களில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இருந்தனர். 1998ல் யாழ் மாவட்டத்தில் மேற்கொள் எப்பட்ட ஆய்வின் படி 100,000க்கு 50.5 பேர் புற்று நோயால் பாதிக்கப்பட்டு இருந்தனர்.



*சீதனம் ஒரு சமூகக் கொடுமை.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பொறுப்பின்மையே நிராகரிப்புக்குக் காரணம்

# 6200 தமிழர்கள் தஞ்சம்






த ஜெயபாலன்

6,200 தமிழர்கள் வரை பிரித்தானியாவுக்கு 2001ல் தஞ்சம் கோரி வந்திருக்கலாம் என 'தேசம்' மதிப்பிட்டுள்ளது. பிரித்தானிய உள்துறை அமைச்சின் புள்ளி விபரப்படி ஜனவரி முதல் செப்ரம்பர் 2001 வரை 4,255 தஞ்ச விண்ணப்பங்கள் இலங்கையரிடம் இருந்து பெறப்பட்டது.

இதே காலப்பகுதியில் பரிசீலிக்கப்பட்ட 8,765 விண்ணப்பங்களில் 82%ஆன 8,185 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு உள்ளது. தற்போது நிராகரிக்கப்படும் விண்ணப்பங்களில் 50% வரை விண்ணப்பதாரியினதும் அவரை பிரதிநிதித்துவம் செய்யும் சட்ட நிறுவனத்தினதும் பொறுப்பின்மையாலேயே நிராகரிக்கப்படுகின்றது. சாட்சி பத்திர விண்ணப்பம் (Statement of evidence form) குறித்த காலத்தில் சமர்ப்பிக்காமை, அல்லது அதனை பூரணமாக நிரப்பாமை, மற்றும் அழைப்புகளுக்கு குறித்த நேரத்தில் செல்லாமல் இருப்பது அல்லது காலம் தாழ்த்தி செல்வது போன்ற Non compliance என்று சொல்லப்படும் பொறுப்பற்ற நடைமுறைகளே நிராகரிப்புக்கு காரணமாக உள்ளது.

தமக்கு போதிய அவகாசத்தை குடிவரவு அதிகாரிகள் வழங்கவில்லை எனவும் விண்ணப்பதாரர்கள் தம்முடன் ஒத்துழைப்பதில்லை எனவும் சட்ட நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.ஆனால் தம்மை பிரதிநிதித்துவம் செய்யும் சட்ட நிறுவனங்கள் தமக்கு வேண்டிய விபரங்களை தருவது இல்லை என்று தஞ்ச விண்ணப்பத்தை கொடுத்துவிட்டு பதிலுக்கு காத்திருக்கும் விண்ணப்பதாரர்கள் தெரிவிக்கின்றனர். அழைப்புகளுக்கு தமது பிரதிநிதிகளை அனுப்பி வைக்காமல் அல்லது கால தாமதமாக அனுப்பி இன்னலப்பட்ட பல விண்ணப்பதாரர்கள் இங்கு இருக்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் குடிவரவு அதிகாரிகளே அவர்களுக்கு அவர்களது சட்ட நிறுவனத்தை மாற்றுமாறு ஆலோசனை வழங்கி உள்ளனர்.

அண்மைக் காலமாக தமிழ் மக்கள் தமிழ் சட்ட நிறுவனங்கள் மீதுள்ள நம்பிக்கையை இழந்து வருகின்றனர். தமது சக்திக்கு மேற்பட்டவர்களை உள்ளெடுப்பது, நேரத்தை முகாமைத்துவம் செய்யாமல் செயற்படுவது, பொறுப்பற்ற செயற்பாடுகள் என்பன அவர்கள் மீது நம்பிக்கையை இழக்க காரணமாக உள்ளன.

2000 ஆண்டு வரையான கடந்த 20 ஆண்டுகளில் 41,985 பேர் தஞ்சம் அடைந்து உள்ளனர். (இவர்களுடன் தங்கி (dependent) உள்ளவர்களையும் சேர்த்தால் இத்தொகை மேலும் அதிகரிக்கும்.) இவர்களில் 685 பேர் மட்டுமே அகதி அந்தஸ்து பெற்றனர். 14,500 பேருக்கு ELR Execeptional Leave to Remain வழங்கப்பட்டது. 30% விண்ணப்பங்களுக்கு எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. கடந்த ஆண்டு ஜனவரி முதல் செப்ரம்பர் வரை 1,170 பேருக்கு அகதி அந்தஸ்தும் 400 பேருக்கு ELR ம் வழங்கப்பட்டது.

பிரித்தானியாவில் தமிழர்கள் திருப்பி அனுப்பப்படுவது பற்றிய செய்திகளின் படி 15-100 பேர்வரை திருப்பி அனுப்பப்பட்டதாக தெரிகிறது. உள்துறை அமைச்சின் தகவலின் படி 1992-1998 வரை 565 பேர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டு உள்ளனர். ஆனால் கடந்த 3 ஆண்டுகளாக திருப்பி அனுப்பபட்டவர்கள் பற்றிய விபரத்தை அது வெளியிடவில்லை. ஆனால் இவ்வாண்டு விண்ணப்பம் முழுமையாக நிராகரிக்கப்பட்ட 30,000 பேரை அவர்களது நாடுகளுக்கு திருப்பி அனுப்ப கடும் போக்குடைய உள்துறை அமைச்சர் முயற்சிகள் எடுத்துள்ளார்.

மேலும் செப்ரம்பரில் அகதிகளை திருப்பி அனுப்பும் உடன்படிக்கை ஒன்றில் பிரித்தானியாவும் இலங்கையும் கைச்சாத்திட்டு உள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு செய்தி குறிப்பு தெரிவிக்கிறது. கடந்த செப்ரம்பர் 30 தகவலின் படி 55 இலங்கையர்கள் குடிவரவுச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு இருப்பதாக பதிவு செய்யப்பட்டு இருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கைவிடப்படுகிறது தமிழீழம்

த ஜெயபாலன்

ஈழத்தமிழர்களின் தாயகம் வெகு வேகமாக கைவிடப்பட்டு வருகிறது. கடந்த கால் நூற்றாண்டு கால யுத்தத்தால் தமது எதிர்காலம் பற்றிக் கவலையுற்ற மக்கள் மிக வேகமாகத் தமது தாயக மண்ணை விட்டு புலம் பெயர்ந்து வருகிறார்கள். மண் மீட்புக்கான போராட்டம் தற்போது எதிர் மறையான விளைவை தமிழர் தாயகத்தில் ஏற்படுத்தி வருகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் உயர்ஸ்தானிகர் அமைப்பின் அண்மைய கணிப்பின் படி அண்ணளவாக ஒரு மில்லியன் (1,000,000) தமிழர்கள் கடந்த 20 ஆண்டுகளில் குறிப்பாக கடந்த 10 ஆண்டுகளில் இலங்கையை விட்டு வேறு நாடுகளுக்கு புலம் பெயர்ந்து உள்ளனர். இவ்வாறு புலம் பெயர்ந்தவர்கள் இலங்கையில் உள்ள மொத்த தமிழ் மக்களில் மூன்றில் ஒரு பகுதியினராக உள்ளனர்.

கடந்த ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற மக்கள் தொகை கணக்கெடுப்பு வடக்கு கிழக்கு பகுதிகளில் முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை. ஆயினும் கடந்த கால தரவுகளை கொண்டு மதிப்பீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. இம்மதிப்பீட்டின் படி இலங்கையில் இரு மில்லியன் 2,000,000 தமிழர்களே வாழ்கிறார்கள். இவர்களில் 50% க்கும் மேற்பட்டவர்கள் வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களிலேயே வாழ்கின்றனர்.

இலங்கைத் தமிழர்களின் மக்கள் தொகைப் பெயர்வு தமிழீழத்தின் எதிர்காலம் பற்றிய பல கேள்விகளை எழுப்பி வருகிறது. கடந்த 10 ஆண்டு களாக துரிதம் அடைந்த புலம்பெயர்வு தமிழீழத்தின் மக்கள் தொகையை 30% க்கும் அதிகமாக குறைத்து உள்ளது.

இதே நிலையில் உள்நாட்டு யுத்தம் தொடர்ந்தால் ஏற்கெனவே புலம்பெயர்ந்து தம்மை வெளிநாடுகளில் நிலைப்படுத்தியவர்கள் தமது உறவுகளை விரைவில் தம்மிடம் அழைக்கவே முயற்சிப்பார்கள். மேலும் மேற்கு நாடுகளில் ஏற்பட்டு உள்ள தேர்ச்சியாளர்களின் வெற்றிடத்தை நிரப்ப கல்வி ஆர்வம் கொண்ட தமிழ் இளைஞர்கள் புலம் பெயர்வார்கள். இவற்றினால் தமிழ் மக்களின் புலம்பெயர்வு மிகவும் தீவிரம் அடையும். தமிழீழ பகுதிகள் கைவிடப்படுவது தவிர்க்க முடியாததாகும். இலங்கை அரசு மேற்கொண்ட குடியேற்றத் திட்டங்களிலும் வேகமாக தமிழீழப் பகுதிகள் கைவிடப்படும்.

தமது தாயகத்தை விட்டு புலம் பெயரும் தமிழர்களின் பிரதான இலக்காக கனடா உள்ளது. கனடாவில் வாழும் தமிழர்களின் தொகை தற்போதைய யாழ்மாவட்டத்தின் (465,000) சன தொகைக்கு சமமாக உள்ளது. ஐரோப்பாவில் தஞ்சம் கோரியவர்கள் 200,000 ஆகும். இந்தியாவில் 120,000 மேற்பட்டவர்கள் அடைக்கலம் பெற்றுள்ளனர். தவிர அவுஸ்திரேலியாவில் 30,000 பேரும் அமெரிக்காவில் 40,000 பேரும் தஞ்சமடைந்து உள்ளனர். மேலும் 80,000 பேர் 12க்கும் அதிகமான நாடுகளில் தஞ்சமடைந்து உள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளி விபரம் காட்டுகிறது.

இவ்வாறு தஞ்சமடைந்தவர்களை தவிர மணம் முடிக்கவும் கல்வி, வேலைவாய்ப்புக்காகவும் சில ஆயிரம் பேர் இந்நாடுகளுக்கு நிரந்தரமாக புலம் பெயர்ந்து வருகின்றனர். இவர்களுடன் இவர்களது பெற்றோரும் பின்னர் வந்து இணைந்து கொள்கின்றனர். வருங்காலங்களில் புலம்பெயரும் இந்த சில ஆயிரங்கள் பல ஆயிரங்களாக மாறும். இப்போதே பல குடும்பங்களுக்கு தாயகத்தில் எந்த நேரடி உறவுகளும் இல்லை. இந்நிலை இன்னும் தொடரும் போது..............................

இலங்கை இனப்பிரச்சினை உடனடியாக தீர்வுக்குக் கொண்டுவரப்படுவது தமிழீழத்தின் எதிர் காலத்துக்கு இன்றியமையாதது. புலம் பெயர்ந்து தம்மையும் தம்மைச் சார்ந்தவர்களையும் உடல், உள, பொருளாதார ரீதியாக தம்மை பாதுகாத்துக் கொண்டவர்கள் தாயகம் சென்று வாழ்வார்கள் என்பது கற்பனையானது. தாயகத்தில் இப்போதும் வாழ்ந்து கொண்டு இருப்பவர்களின் எதிர்காலம் பாதுகாக்கப்பட வேண்டியது இன்றியமையாதது.

சிங்கள அமைப்புகள் குறிப்பாக வர்த்தக தலைமைகள் சமாதானத்துக்காக அழைப்பு விடுக்கின்றன. SRI LANKA FIRST என்று அரசியல் தலைவர்களை பேச்சு வார்த்தைக்கு நிர்ப்பந்தித்து வருகின்றன. சிங்கள சமூகமும் இந்த யுத்தத்தின் வேதனையை சுமக்கவே செய்கிறது. ஆகவே இந்த யுத்தத்தில் அவர்களும் களைத்து போயே உள்ளனர். சகல இலங்கை மக்களுக்கும் சமாதானம் அவசியம்.□□



**சீதனம் ஒரு சமூகக் கொடுமை.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புத்தாயிரத்தில் தமிழ் பெண்கள்

**Tamil Women Development Forum** - வெளியிட்ட செய்திக் குறிப்பின் சாரம்

கடந்த பல ஆண்டுகளில் பெண்களின் உரிமை தொடர்பாக மாற்றங்கள் ஏற்பட்டுள்ள போதிலும் ஆண் பெண்ணிற்கு இடையேயான சமூக உறவில் சமத்துவம் அற்ற நிலை தொடர்ந்தும் காணப்படுகிறது. குறிப்பாக சட்டத்தின் முன்னும், சட்ட நிர்வாக அமைப்புகளிலும் பாரபட்சம் நிலவி வருகிறது. இன்னொரு முக்கிய அம்சம் என்னவெனில் பிள்ளை வளர்க்கும் பொறுப்பும், குடும்பக் கவனிப்பும் பெண்களின் தலையிலேயே தொடர்ந்தும் போடப்படுகிறது. குழந்தை உருவாக்கத்தை தாய் மேற்கொள்கின்ற போதிலும் குழந்தையின் எதிர் காலத்தினை தாயின் கைகளிலேயே பொறுப்பிப்பது பாரபட்சமாகவே கொள்ளப்படுகிறது.

குடும்பத்தில் மாத்திரமன்றி சமூகத்தின் ஏனைய பல மட்டங்களிலும் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி போன்ற விடயங்களில் பெண்களின் பங்களிப்பு முக்கியமானதாகும். ஆனால் கடந்த 20 வருடங்களில் சமூகத்தில் பெண்களின் அந்தஸ்து பெருமளவு உயர்ந்திருக்கின்ற போதிலும் பெரும் பாலான பெண்களின் நிலைமை இன்னும் ஆண்களை விட பின்தங்கியே காணப்படுகின்றது.

வழமையான மனித உரிமை மீறல்களுக்கும் மேலாக சமூகத்தில் பெண்கள் பிரத்தியேகமாக அனுபவிக்கும் சில துன்புறுத்தல்கள் மனித உரிமை அமைப்புகளால் புறக்கணிக்கப்பட்டே வருகின்றது.

உண்மையில் இலங்கையில் பெண்களின் புரட்சிகர ஆதிபத்தியம் வரலாற்றில் முன்னேற்ற கரமான சக்தியாகவே பரிமளிக்கின்றது. இந்த சக்தி சர்வதேச மனித உரிமைப் பெறுபேறுகளின் நன்மைகளை அனுபவிக்கும் வகைக்கு மாற்றப்பட வேண்டிய அவசியம் பலராலும் வலியுறுத்தப்பட்டு உள்ளது.

போர் தொடர்பில் உறவுகளின் உயிர் இழப்புகள், பாலியல் வல்லுறவுகள் தொடக்கம் சிறைக் கொடுமை வரை இலங்கை பெண்கள் எதிர் நோக்கும் அவலங்கள் உலகறிந்தவை. ஆனாலும் இந்த விடயங்கள் தொடர்பில் அவர்கள் அடைந்த நிவாரணம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

அதேவேளை புலம்பெயர் நாடுகளில் புதிய சூழ்நிலைகளாலும் ஏனைய சமூக பிரச்சினைகளாலும் இலங்கை தமிழ் பெண்கள் எதிர்நோக்கும் சிரமங்களும் மிக அதிகம். சமூகத்தை எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்த தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் போது அதில் பெண்களின் பங்களிப்பு மிகவும் அரிதாகவே காணப்படுகிறது.

இவற்றுக்குத் தீர்வு காணும் நோக்கிலேயே பெரும்பாலும் லண்டன் வாழ் பெண்கள் இணைந்து தமிழ் தகவல் நடுவத்தின் ஒரு பிரிவாக 1995இல் தமிழ் மகளிர் அபிவிருத்தி மன்றம் என்ற அமைப்பை ஏற்படுத்தினர். புலம்பெயர்ந்து வாழும் பெண்களின் பிரச்சினைகள் தொடர்பாக கூடி ஆராய்ந்து அதற்கு தமது மட்டத்திலேயும் பிறர் உதவியுடனும் தீர்வு காணும் முயற்சியில் இவ் அமைப்பு ஈடுபட்டு வருகின்றது. இன்று தாமே சுயமாக தமது பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் தன்னிறைவு நிலைமை எய்திக் கொண்டுவருகின்றது.

பெண்களின் மனித உரிமைகளை உறுதிப் படுத்த போராடுவது, தமிழ் பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஒரு புரிந்துணர்வை காணுதல், இவை தொடர்பில் கருத்தரங்குகள், விரிவுரைகள், மாநாடுகள் மற்றும் வெளியீடுகளை செய்வது, ஏனைய பெண்கள் அமைப்புகளுடன் தொடர்பை ஏற்படுத்துதல், தமிழ் பெண்களுக்கான பயிற்சி மற்றும் கல்விக்கான ஏற்பாடுகளை செய்தல் போன்றவை பரந்துபட்ட அளவில் இந்த அமைப்பினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

புலம் பெயர் நாடுகளில் வாழும் தமிழ் பெண்களின் விடயங்களை கையாள்வதுடன் தாயகத்தில் பல சிரமங்களின் மத்தியில் உள்ள பெண்களுக்கு கைகொடுப்பதும் இந்த அமைப்பின் ஒரு முக்கிய குறிக்கோளாகவும் உள்ளது. தாயக பெண்கள் விடயத்தில் குரல் கொடுக்கவும் அவர்களுக்கு சில மட்டங்களில் உதவிகளை செய்யவும் இந்த அமைப்பு முயற்சி செய்கின்றது.

இவற்றுக்கெல்லாம் மேலாக அநியாயமான பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு இலங்கை சிறைகளில் கொடுமை அனுபவிக்கும் தமிழ் பெண்களின் விடயத்திலும் இந்த அமைப்பு ஆர்வம் காட்டி வருகின்றது. முன்னாள் பெண் கைதிகளை தொடர்பு கொண்டு அவர்கள் தரும் தகவல்களின் அடிப்படையில் மனித உரிமை அமைப்புகளின் உதவியை நாடுவதிலும் இந்தச் சிறைக் கொடுமைகளுக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் குரல் கொடுப்பதிலும் இந்த அமைப்பு ஈடுபட்டுவருகின்றது.

மேலதிக விபரங்களுக்கு
Tamil Women Development Forum
Telephone: 020-8514 6390
e-mail: twdf@cs.com

***சீதனம் சம்பந்தப்பட்ட திருமணங்களை பகிஸ்கரிப்போம்.***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'தமிழா நீ தமிழில் பேசு' என்று போராட்டம் நடத்த வேண்டியிருக்கிறது. நாம் சுதந்திரம் பெற்றால் மட்டும் போதாது; சுதந்திரமாக வாழ்வதற் குரிய தகுதியை பெற வேண்டும். அப்படியில்லா விடில் பெற்ற சுதந்திரத்தால் எந்தப் பயனும் கிடைக் கப் போவதில்லை. பச்சைத் தமிழன் கருணாநிதி கள்ளடக் குறிச்சி என்ற புகைவண்டி நிலையத்தை தான்மியாபுரம் என மாற்றியதற்காக தலையைக் கொடுத்து நின்றார். ஆனால் அவர் ஆட்சிக் காலத்தி லேயே தமிழுக்கு பெரும் பிரச்சினை இருந்தது.

தமிழருடைய இந்த நிலைக்குக் காரணம் அவர்களுக்கு தமிழில் வெறுப்பு என்பதல்ல. அவர்களுக்கு தமிழில் விருப்பமில்லை. தமிழால் பணம் சம்பாதிக்க முடியாது. அதனால் தமிழை படித்து என்ன பிரயோசனம் என்று 60 ஆண்டுகளுக்கு முன் நான் தமிழ் படிக்க அண்ணாமலை பல்கலைக் கழகத்துக்கு சென்றபோது என்னைக் கேட்ட அதே கேள்வியைத் தான் மக்கள் இப்போதும் கேட்கிறார் கள்.

'அட கெழுவாய் பல தொழிலும் இருக்க தமிழ் அதிகம் என்றே கற்றுவிட்டடேன். திடமுள்ள வேசியராய்ப் பிறந்தேனில்லை. களைக் கூத்தாடத்

# வீட்டில் தமிழ்,



தெரிந்தேன் இல்லை. .............' என தமிழ்ப் பற்று க் கொண்ட இடைக்காலப் புலவன் ஒருவன் தமிழர்கள் மீது கோபப்பட்டான்.

ஏன் இந்தச் சமூகத்துக்கு இந்தக் குணம். இது ஆராயப்பட வேண்டிய ஒன்று. டொக்டர் கோல்வெல் என்ற பாதிரியாரால் The Comparative Grammer of the Dravidian Languages என்ற நூல் எழுதப்படும் வரை தமிழ் சமஸ்கிருதத்தில் இருந்தே வந்ததாக அன்றைய தமிழ் அறிஞர்கள் கூறிக் கொண்டு இருந்தனர். தமிழ் தனி மொழி அல்ல என்றும் சமஸ்கிருதத்தில் இருந்து 5 எழுத்துக்களே மாறுபட்டு இருப்பதாகவும் விளக்கமளித்தனர். இப்படியாக தமிழின் பெருமையை எங்களுக்கு சொன்னவர் மேல் நாட்டவர். நாங்கள் தமிழைப் போற்றுவோம், விழாக் கொண்டாடுவோம், கும்பிடு வோம், பூசை பண்ணுவோம் ஆனால் நாங்கள் தமிழைப் படிக்க மாட்டோம், சிந்திக்க மாட்டோம். இது தான் தமிழன் நிலையாக இருக்கிறது.

சென்னையில் இருந்து அன்று பலாலி விமான நிலையத்துக்கு வந்த போது தமிழில் படிவத்தை நிரப்பியதற்காக (அரசாங்கம் தமிழில் நிரப்ப அனுமதித்து இருந்தது.) இன்னொரு தமிழ னால் காத்திருக்க நிர்ப்பந்திக்கப்பட்டேன். ஹாட்லி கல்லூரியில் இரட்நாயக்காவுக்கு பாராட்டு விழா ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இரட்நாயக்காவும் வந்திருந்தார். அப்போது சபையில் பேசியவர்கள் எல்லாம் ஆங்கிலத்தில் பேசினார்கள். ஒரு ஆசிரியர் சிங்களத்திலும் பேசினார். அதே கல்லூரியில் கல்வி கற்ற இரட்நாயக்கா தமிழல் பேசிய போது நீங்கள் தமிழில் பேசியிருக்கலாமே என தெரிவித்தா். இச்சம்பவங்கள் எதைக் காட்டுகிறன? நாங்கள் சிங்க ளவர்களிடம் தமிழ் வேண்டும் என சண்டை பிடிக் கிறோம். ஆனால் உண்மையில் அப்படி இல்லை. எங்களுக்கு தமிழ் வேண்டாம். அவர்களுக்கு சிங்களம் வேண்டுமானால் எங்களுக்கு தமிழ் வேண்டும், அவர்களுக்கு பௌத்தம் என்றால் எங்களுக்கு சைவம் வேண்டும். இப்படி ஒரு எதிர்ச் செயற்பாடு உடையவர்களாகத் தான் வாழ்கிறோம். இயங்குகிறோம். அந்த பிள்ளை படித்தால் என்ரை பிள்ளை படிக்க வேணும். இந்தப் போட்டி நிலை இல்லாமல் சுயமாக, இயல்பாக சிந்திக்கும் பழக்கம்



# தமிழரோடு தமிழ்

இல்லை. இது தமிழினத்தில் உள்ள தவறு.

அருகில் இருந்த சிங்கள மொழியை கற்க மாட்டோம் என சவால் விட்டு இப்பொழுது ஆறாயிரம் மைல்களுக்கு அப்பால் வந்து ஆங்கிலம் போன்ற ஐரோப்பிய மொழிகளை கற்கிறோம் என சிங்களவர்கள் என்னை கேட்கிறார்கள். வீட்டில் தமிழ் தமிழரோடு தமிழ். இப்படி சில கோட்பாடு களை வைத்திருக்க வேண்டும். இப்படி இருந்தால் தான் எங்களுடைய தனித் தன்மையையும் அடையா ளத்தையும் பாதுகாக்க முடியும். □□□□□□□□□□

*23 டிசம்பர் 01 அன்று கிழக்கு இலண்டன் FORD Community Centre ல் தமிழர் தகவல் நடுவத்தால் நடத்தப்பட்ட தமிழ் மொழி ஆய்வு சந்திப்பில் வித்துவான் வேலன் ஆற்றிய தலைமை உரையின் சாரம். Dr பொன் சத்தியநாதனுடைய தமிழும் பற்றிய மொழி ஆய்வு அடுத்த பக்கத்தில் தொடர்கிறது..*





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிங்கிலம் V தமிழ்



**Dr** பொன் சத்தியநாதன்
மொழியியல் ஆய்வாளர்
அவுஸ்திரேலியா

ஒலியியல், மருத்துவவியல் அடிப்படையிலும் மற்றைய மொழிகளில் ஏற்பட்ட தாக்கங்களை ஆராய்ந்ததிலும் தமிழ்மொழி இலகுவானது என்பதும் அது ஆங்கிலத்திலும் எளிமையானது என்பதும் ஆய்வு முடிவு. ஆனால் இன்று வேற்று மொழித் தாக்கங்களாலும் வேற்று மொழி ஒலிகள் ஊடுரு வலாலும் தமிழ் ஒரு பொருளாதார இலாபம் மிக்க மொழியாக இல்லாததாலும் பிற மொழியை கற்கும் வரை மட்டுமே தமிழைப் பயன்படுத்துவதாலும் மேலும் சென்னை ஊடகங்களாலும் தமிழ் அழிந்து கொண்டு செல்கிறது. இதனை சீர்செய்து தமிழை காக்க முடியுமா என்றால் சாத்தியமில்லாத சூழ்நிலை இருக்கிறதே என்ற கவலை இருக்கின்றது.

தமிழர்கள் இலங்கை, தமிழ்நாடு உட்பட உலகின் எந்தப் பாகத்தில் வாழ்ந்தாலும் தமிழ் இரண்டாம், மூன்றாம் மொழியாகவே இருந்து வருகிறது. எம்மை நாம் ஆளாதவரை தமிழ் வாழாது. என்று ஈழவிடுதலைப் போராட்டம் ஆரம்பமானதோ அதன் பின் தமிழ் காக்கப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது.

ஆனால் தமிழ் நாடு அல்லது ஈழம் வந்த பின்பு அடுத்த கணமே தமிழில் கற்பிக்கப்படக் கூடிய அளவுக்கு தமிழ் ஒரு சீரான எளிமையான மொழியாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் சிறிய காலத்துக்கு ஆங்கிலத்திலே கற்பிக்க வேண்டியிருக்கும். இதன் பின்னர் தமிழுக்கு மாறுவது மிகவும் கடினம். இன்று தமிழ் நாட்டில் இருப்பது இதே பிரச்சினை தான். தமிழ் நாட்டில் தமிழை தாய்மொழியாகக் கற்பிப்பது சட்ட விரோதமானது இல்லை. எதிர்காலத்தில் ஈழத்திலும் இந்நிலை உருவாகலாம்.

2000 ஆண்டுகளாக சிதறி வாழ்ந்த யூத மொழி பேசிய யூதர்கள் தமக்கு என ஒரு நாடு உருவாக்கப்பட வேண்டும் என்று சிந்திக்கத் தொடங்கினர். இந்தச் சிந்தனையின் விளைவாக 1923ல் இருந்து யூதமொழியை மீட்பதற்கான ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டது. யூதப் பள்ளிகள் ஆரம்பமாகின. இதற்கு 25 ஆண்டுகளுக்குப் பின்னர் யூதமொழி பேசும் இஸ்ரேல் நாடு உருவாக்கப்பட்ட பின் மீண்டும் அம்மொழி சீராக்கப்பட்டது. இதனால் 2000 ஆண்டுகளாக சிதறுண்டு கிடந்த மொழி 1948ல் இஸ்ரேல் உருவாக்கப்பட்ட போது உலகின் சிறந்த மொழிகளில் ஒன்றாகியது.

ஆகவே எம்மை நாம் ஆள்கின்ற போது தமிழ் மொழி சீர்படுத்தப்பட்ட மொழியாக இருப்பது அவசியம். இலங்கையிலே தமிழ் மறுக்கப்பட்டதால் அகதிகளாக மேற்கு நாடுகளுக்கு வருகின்றோம். இங்கு தமிழை விட்டு வேறு மொழிகளை தாய் மொழியாக்குகிறோம். அப்படியானால் ஏன் இலங்கை யிலே சிங்களத்தையும் தமிழ் நாட்டிலே ஹிந்தியை யும் தாய்மொழியாக்கக் கூடாது.

கடந்த நூற்றாண்டிலே 63 மொழிகள் அழிந்து போயின. தமிழ் தமிங்கிலம் ஆகிக்கொண்டு போகிறது. அதற்கு காரணத்தை சிந்தித்து மெல்பேர் னில் உள்ள 'ஒன்றிய தமிழர் தோழமை' அமைப்பு பல ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. இதனை உலகம் முழுவதும் வெகுவிரைவில் பரப்ப நடவடி க்கை எடுத்து வருகின்றோம்.

எமது அடிப்படை தமிழம். ஆதியிலே பயன்படுத்தப்பட்ட இச்சொல்லு ஆரியர் வருகையிலே ஒலித்திரிபால் திறமிழம் ஆகி திறவிடம் ஆகி பின்னர் திராவிடம் ஆகியது. தமிழத்தின் ஆறு பண்புகளாவன மண், இனம், நெறி, மொழி, பண்பு, கலை. இவ்வாறு பண்புகளும் காக்கப்படுவது தமிழத்துக்கு அவசியம்.

இங்கு முக்கிய பன்பான மொழியை எடுத்து கொள்கிறோம். தூய்மையான தமிழ் இன்று அழிந்து போவதற்குக் காரணம் என்ன வென்றால் இந்திய உபகண்டம் முழுவதும் பேசப்பட்ட பண்டைய தமிழ்; ஆரியர் ஊடுருவலாலும் ஆரிய மொழிக் கூறுகளின் தாக்குதலாலும் ஒலி கூறுகள் தாக்குதலாலும் 18 மொழிகளாகச் சிதறுண்டு போனது. ஆனால் இன்று உலகளாவிய அளவிலே தமிழை சிதைத்துக் கொண்டு வருவது சென்னை ஊடகங்களே. சென்னை ஊடகங்கள் இப்படியே தொடர்ந்தால் நாம் தமிழ் பேச முடியாது தமிங்கிலம் தான் பேச முடியும்.

தூய தமிழைப் பேசி வந்தவர்கள் ஈழத்தில் யாழ்ப்பாணத்தில் தான். காரணம் ஆரியரும் மற்றவர்களும் இந்தியா முழுக்க குடியேறி இருந்த போதும் யாழ்ப்பாணத்தில் மட்டும் தான் ஆரிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மொழி

மற்றும் ஏனைய குடியேற்றங்கள் குறைவாக இருந்தது. பூசைக்கு மட்டும் ஐயர்கள் வந்து போனதால் யாழில் பேசப்பட்ட தமிழில் ஆரிய மொழித் தாக்கம் மிகக் குறைவாக இருந்தது. ஆனால் கடந்த 50 ஆண்டுகளாக சென்னை தமிழ்த் திரைப் படங்கள் கேவலமான ஒலிகளை ஈழத்துத் தமிழில் சேர்க்கின்றன. இதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது சிந்திக்கப்பட வேண்டிய ஒன்று.

ஈழத்தில் உள்ள தமிழ் உச்சரிப்பை அறிந்திராத புரிந்திராத தமிழகத்தவர்கள் அதனை தவறான உச்சரிப்பாக நினைக்கிறார்கள். அது மட்டுமல்ல தெனாலி என்று ஒரு படத்தை எடுத்து ஈழத்துத் தமிழ் உச்சரிப்பைக் கெடுத்தார்கள். அது விடயமாக கமலஹசனுடன் தொடர்பு கொண்டு சரியான ஈழ உச்சரிப்பை பதிவு செய்து தருகிறேன் என்றால் ஆளை விட்டுவிடு என்று ஒதுங்கிவிட்டார். நவம்பரில் தமிழ் ஆசிரியர் மாநாடு சிங்கப்பூரில் நடந்த போது இலங்கை தமிழர்கள் தமிழைக் கெடுக்கிறார்கள் எனத் தெனாலி படத்தை பார்த்து விட்டு தமிழக ஆசிரியர் ஒருவர் விமர்சனம் செய்தார்.

கேள்விச் செவி இல்லாமல் ஆங்கிலம் வாழாது. இன்று தொடர்புசாதனங்கள் எதுவும் இல்லாமல் இருந்து இருந்தால் அவுஸ்திரேலியா, பிரித்தானியா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் உள்ள எழுத்து வடிவம் A - Z இருந்தாலும் பேசப்படும் மொழி வெவ்வேறானதாக இருந்து இருக்கும். ஆங்கிலத்தைக் கற்றுக் கொண்டாலும் அதன் உச்சரிப்பை கேள்விச் செவியால் மட்டுமே கற்க முடியும். இதே போன்று தான் ஏனைய மொழிகளும். ஆனால் சீன மொழி ஒலியியல் மொழி அல்ல.

ஆனால் இந்திய மொழி மட்டும் தான் ஒலியி யல் மொழியாக உள்ளது. அவற்றினுள்ளும் மிக குறைந்த வரிவடிவங்களும் ஒலிவடிவங்களும் கொண்ட ஒரே மொழி தமிழ் மொழிதான். மற்றைய இந்திய மொழிகள் எல்லாமே சமஸ்கிருதத்திலே ஆரியர் வந்து புகுத்திய ஒலிக் கூறுகளுக்கு வரி வடிவம் கொடுத்து மற்றைய மொழிகளையும் இந்தியா முழுவதும் பேசப்பட்ட தமிழையும் அழித்து 18 மொழிகளை உருவாக்கினர். தமிழ் சமஸ்கிருதத்தில் இருந்து தோன்றியது என்பது தவறானது. ஆரியர் புகுந்த போது எப்போதுமே உச்சரிக்க முடியாத மொழிகளுக்கு எல்லாம் வரிவடிவம் கொடுத்து சமஸ்கிருதம், பாளி போன்ற மொழிகளைப் புகுத்தினர். இது பேச்சுமொழியாக இருக்கவில்லை. வேதங்களை பேசமுடியாத மொழியில் எழுதிவிட்டு பூசைக்கு மட்டும் கத்துகிற மொழியாக வைத்திருந்தார்கள். இந்த மொழி அம்சங்கள் தமிழிலே புகுத்தப்பட்டு பிரதேசம் பிரதேசமாகப் போய்க்கொண்டு இருந்தது. இதனை ஒலியியல் ஆய்வு மூலம் நிரூபிக்க முடியும்.

மேலும் ஒலி வீச்சு கூடிய ஒலிகளைக் கொண்ட மொழி தமிழ். அந்த ஒலி வீச்சு கொண்ட மொழியை 5, 6 ஆக உடைக்காமல்விட்டதால் தான் தமிழ் தப்பிப்பிழைத்தது. உதாரணமாக 'காகம்' என்ற பறவையை வெவ்வேறு பிரதேசங்களில் kakam, kagam, gagam என பலவிதமாக உச்சரித்தாலும் அதனை தமிழில் எழுதும் போது எல்லா பிரதேசங்களிலும் காகம் என்றே எழுது வார்கள். ஆனால் ஒவ்வொரு உச்சரிப்புக்கும் வரிவடிவம் கொடுத்து இருந்தால் ஒவ்வொரு பிரதேசத்திலும் உச்சரிப்புக்கு ஏற்ற வரிவடிவத்துடன் தான் எழுதி இருப்பார்கள். அதனால் வெவ்வேறு மொழியாக அது மாறியிருக்கும். ஆனால் தமிழ் மொழி ஒலி விச்சு கூடியதாலும் அந்த ஒலி வீச்சை உடைக்காமல் இருந்ததாலும் தமிழ் மொழி இந்த ஆபத்தில் இருந்து தப்பியது. ஆனால் அனைத்து ஒலி வடிவங்களுக்கும் வரிவடிவம் கொடுத்ததாலே காஷ்மீரில் இருந்து கன்னியா குமரி வரையில் 18 மொழிகள் இந்தியாவில் உருவாகியது. இப்படியாக தேவையற்ற உச்சரிக்க முடியாத ஒலிகளுக்கு எல்லாம் வரிவடிவம் கொடுத்து சமஸ்கிருதத்தை பேச முடியாத மொழியாக மாற்றியதை குறிப்பிடலாம்.

இந்தியா, இலங்கை, மடகஸ்கார் போன்ற நாடுகள் மில்லியன் வருடங்களுக்கு முன்னே ஆசியாக் கண்டமாக இல்லாமல் தனிக் கண்டமாக இருந்தது. என்பது புவியியல் ஆய்வாளர்களின் ஆய்வு முடிவு. அப்போது குரங்காக இருந்து மனிதன் கூர்ப்படைந்த போது குரல்வளை, ஒலித்த ஒலிகளின் அடிப்படையில் ஆய்வுகளை மேற்கொண்டதில் அந்த ஒலி வடிவங்கள் (அப்போது பேசப்பட்டு வந்த மொழி எமக்குப் புரியாது.), அம் மொழியின் அம்சங்கள் இன்றும் காணப்படுகின்ற ஒரே மொழி தமிழ் தான்.

ஆதியிலே நாம் பேசிய மொழி இ(ஈ)ழ் (அப்போது குறில், நெடில் வேற்றுமைகள் இருக்க வில்லை. அது பிற்காலத்தில் சேர்க்கப்பட்டது.) என்று அழைக்கப்பட்டது. பிற்காலத்தில் தம் மொழியை தம் 'இழ்'மில் பேசி 'தமிழ்'மை உருவாக்கினார்கள். அந்த ஈழ் பேசப்பட்ட பிரதேசம் ஈழமாக இருந்தது. குமரிக்கண்டம் என்று பிற்காலத்தில் ஆரியர்களால் அழைக்கப்பட்ட பிரதேசத்தின் பெயர் ஈழம் என்பது வரலாறு. பிற்காலத்தில் இந்தியாவில் இருந்து இலங்கை கடலால் பிரிக்கப்பட்ட போது பிரிக்கப்பட்ட இலங்கையை மட்டும் ஈழம் என அழைத்தனர்.

இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பு ஆரியர் வருகையை தொடர்ந்து நெறி பிறழ்வதை கண்டு வள்ளுவரும் மொழி பிறழ்வதை கண்டு தொல்காப்பியரும் கொதித்தனர். அதனால் தான் தமிழ் மொழியில் வேறு வரிவடிவங்கள் சேர்க்கப்பட கூடாது என்பதற்காக 'அகர முதல எழுத்தெல்லாம் முப்பதென்ப' என வள்ளுவர் கூறிவைத்தார். ஆனால் இன்று சென்னை ஊடகங்கள் ஐ, ஷ, ஸ, ஹ போன்ற கிரந்த வடிவங்களை உள்ளெடுக்கின்றன. ஈழத் தமிழர்களும் சிந்திக்காமலேயே அதனை பயன்படுத்துகின்றனர். அது தவறு. தவிர்க்கப்பட



**சீதனம் ஒரு சமூகக் கொடுமை.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாணிக்கவாசகம் சுரேஸ்

# வழக்கு 6வது ஆண்டாக தொடர்கிறது

விடுதலை புலிகள் அமைப்புக்கு நிதி வசூலித்தமைக்காக 1995ல் கைது செய்யப்பட்ட மாணிக்கவாசகம் சுரேஸை இலங்கைக்கு திருப்பி அனுப்பும் முயற்சியில் கனடிய அரசாங்கம் தோல்வி கண்டு உள்ளது. சுரேஸ் திருப்பி அனுப்பப்பட்டால் அவர் சித்திரவதைக்கு உள்ளாவார் என்பதை ஏற்று கொண்டு, திருப்பி அனுப்பப்படுவதற்கு எதிராக வாதிட மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை அந் நாட்டு உயர் நீதிமன்றம் வழங்கி இருக்கிறது. அகதிகள் மனித, உரிமைகள் (தமிழ், சர்வதேச) அமைப்புகள் இதனை வரவேற்று உள்ளன.

கடந்த ஆண்டு செப்ரம்பர் 11 தாக்குதலை தொடர்ந்து இறுக்கமாக்கப்பட்ட குடிவரவு, தஞ்ச கொள்கைகள் உள்நாட்டு பாதுகாப்பையும் மனித உரிமைகளையும் சமப்படுத்த தவறி இருப்பதை நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பு சுட்டி காட்டி உள்ளது. கனடாவின் தேசிய பாதுகாப்பை கருதி ஒருவரை தடையின்றி திருப்பி அனுப்ப முடியாது என தெரிவித்த உயர் நீதிமன்றம் விதிவிலக்காக தவிர்க்க முடியாத சூழ்நிலையில் திருப்பி அனுப்பப்பட்டால் சித்திரவதைக்கு உள்ளாவார் என்றாலும் திருப்பி அனுப்ப முடியும் என்றும் குறிப்பிட்டு உள்ளது. ஆனால் சித்திரவதைக்கு எதிரான உடன்படிக்கையின் 3வது சரத்து சித்திரவதை என்பது விதிவிலக்குக்கு உட்பட்டது அல்ல என ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அமைப்பு தெரிவித்து உள்ளது.

புலிகள் சார்பு உலக தமிழர் இயக்கம் கனடாவின் தமிழ் வார இதழான மஞ்சரி சஞ்சிகையை வன்முறையாலும் மிரட்டல்களாலும் பலவந்தமாக நிறுத்த காரணமாக இருந்ததாக அதன் ஆசிரியர் DBS ஜெயராஜ் தெரிவித்து இருந்தார். ( The Srilanka Monitor - April 1996 - Page 4) அப்போது மாணிக்கவாசகம் சுரேஸ் அவ்வமைப்பின் இணைப்பாளராக இருந்தார்.□□□□



Dr பொன் சத்தியநாதன்

→

வேண்டும். இல்லையானால் காலப் போக்கில் முழுக் கிரந்த எழுத்துக்களையும் உள்வாங்கி மலையாளமாக மாறிவிடுவோம். ஆரிய உச்சரிப்பும் ஆரிய வரிவடிவங்களும் உள்ளே வருவதை நாங்கள் தடுக்காவிட்டால் தொல்காப்பியத்தை படிப்பதும், ஒலியியல் அடிப்படையில் தமிழை வளர்ப்பதும் பயனற்றது.□□□□□□□□□□□□□□□□□□□□□

# குறள் தரும் புதிய விளக்கம்

திருக்குறளுக்கு உரை எழுதும் போது பல தவறுகள் விடப்பட்டு இருக்கிறது.உதாரணமாக முதல் குறளைப் பார்ப்போம்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்கே உலகு.

பயன்பாட்டில் உள்ள உரை எழுத்துகளில் அ முதலாவதாக இருப்பது போல உலகுக்கு கடவுள் முதலானவர் எனக் கூறுகிறது.

ஆனால் இந்தக் குறளில் 'போல' என்ற சொல்லை வள்ளுவர் பயன்படுத்தவில்லை. முதற்றேயும் ஆதியும் ஒரே அர்த்தமுடையவை. ஆகவே முதலான கடவுள் தான் முதலானவர் என்று பகவானுக்கு ஆதியை அடைமொழியாகக் கொள்ள முடியாது.

இந்தக் குறளின் சரியான விளக்கம் என்னவென்றால் இறைவனை முதலாவதாகக் கொண்ட உலகிலே அகர முதல எழுத்துக்கள் தான் எமக்குத் தொடக்கம். அகர முதல எழுத்துக்கள் என்னவென்றால் அது எங்கள் மொழி என தொல்காப்பியர் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறார்.

இறைமையை முதலாவதாகக் கொண்ட உலகிலே மனிதனுக்கு அவன் மொழி தான் தொடக்கம். இந்த உரையை திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவில் நான் தெரிவித்த போது கலைஞர் கருணாநிதியும் இதனை ஏற்றுக் கொண்டதுடன் தொன்மை இலக்கியங்களின் உரைகள் மீள எழுதப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். தமிழ் உரை மட்டுமல்ல தமிழ் மொழியும் தற்போது மிகவும் சிக்கலுக்குள் தள்ளப்பட்டு இருக்கிறது.

Dr பொன் சத்தியநாதன்

**சீதனம் சம்பந்தப்பட்ட திருமணங்களை பகிஸ்கரிப்போம்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# ஈழத்துத் தமிழ் நூல்களின் கண்காட்சி

# மனதின் நெருடல்கள்

காலம் : நவம்பர் 25 01
இடம் : கனக துர்க்கை அம்மன் அலயம், ஈலிங் இலண்டன்

கண்காட்சி என்ற பதத்திற்கு க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி கீழ்க்கண்ட விளக்கம் கொடுக்கின்றது.

"பார்வைக்காகவும் தகவல் அறிவிப்பதற்காகவும் விற்பனைக்குக் கிடைக்கும் படியாகவும் பொருள்களை ஓர் இடத்தில் விளம்பரப்படுத்தி வைக்கும் தற்காலிக ஏற்பாடு". நூல்க் கண்காட்சிக்கும் இது பொருந்தும்.

சுமார் 4500 நூல்கள் அங்கு பரவிக்கிடந்ததைக் கண்ணுற்ற வேளை சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் கொழும்பில் தேசிய நூலகத்தில் இடம்பெற்ற ஒரு 'தேசிய' நூல் கண்காட்சியில் இடம் பெற்ற ஈழத்தமிழர் வெளியீடுகளைப் பறை சாற்றும் சில நூறு வெளியீடுகளின் (பெரும்பாலும் அரசாங்க வெளியீட்டுத் திணைக்களத்தின் பாடநூல்கள்) கண்காட்சி தான் என் சிந்தனையில் அநாவசியமாக மின்னி மறைந்து தொலைத்தது.

ஈழத்தமிழர் நூல்களின் வெளியீடுகள், அவர்களின் புலம் பெயர் வாழ்வின் வசதி வாய்ப்புகள் எழுத்துச் சுதந்திரம் தொழில்நுட்பத் தேர்ச்சி இத்தியாதி காரணிகளால் மடை திறந்த வெள்ளமாகப் பெருகி வருவது மகிழ்ச்சியே. இங்கு இந்த வெள்ளத்தில் அள்ளுண்டு வரும் சருகுகளையும் சகதியையும் இச்சிறு குறிப்பில் நான் விமர்சிக்க முயலவில்லை.

மண்டபம் நிறைந்த அறிஞர் கூட்டம் என்று குறிப்பிட முடியாவிட்டாலும் வந்த அனைவரும் அறிவு தாகத் தோடு அங்கே வந்திருந்தமை அவர்கள் அமைப்பாளர்களிடம் தாங்கள் தேடி வந்த நூல்களைப் பற்றித் தீவிரமாக விசாரித்ததிலிருந்து புலனாகியது. இரண்டு மணி தொடக்கம் ஆறு மணி வரை கண்காட்சி இடம் பெற்றது. அதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள அமைப்பாளர்கள் செலவிட்ட நேரமும் உழைப்பும் மிக அதிகமாகப்பட்டது. பெரும் சிரமத்தின் மத்தியில் நூல்கள் அங்கு தருவிக்கப்பட்டிருந்தன. பயனை அதிகம் எதிர்பாராது, வர்த்தக நோக்கமின்றி ஒழுங்கு செய்யப்பட்ட கண்காட்சி என்ற வகையில் முல்லை அமுதனும் அவருக்க ஆதரவு நல்கிய இலண்டன் தமிழ் இலக்கிய மன்றத்தினரும், குறிப்பாக இராஜமனோகரனும் பாராட்டுக்குரியவர்கள்.

ஆயினும் மனதில் சில உறுத்தல்கள். இவ்வளவு நேரச்செலவு, பொருட்செலவுடன் கண்காட்சியை ஒழுங்கு செய்தவர்கள் அதை வகைப்படுத்தி ஒழுங்கு செய்யத் தவறிவிட்டார்கள். 4500 புத்தகங்களையும் மேசையில் பரப்பி வைப்பதால் மாத்திரம் கண்காட்சியின் நோக்கம் ஈடேறி விடாது. பார்வையாளர்கள் நூலை எளிதில் பார்வையிட எவ்விதமான ஒழுங்குகளும் செய்திருக்கவில்லை. ஒரு நூலைத்தேடி முழு மேசையையும் வலம் வந்த வண்ணம் இருந்த பலரை எதிர்கொள்ள முடிந்தது. எளியதொரு பகுப்புமுறையில் நூல்களுக்கு இலக்கமிட்டு அந்த இலக்க ஒழுங்கில் எதிர்காலத்தில் நூல்களை நூலகங்களில் வகுப்பது போன்று மேசைக்கு மேசை பிரித்து வைத்தால் வாசகரின் நேரத்தை மீதப்படுத்தலாம்.

வாசகருக்குரிய நூலை வாசகர் அடையவும் நூலுக்குரிய வாசகரை நூல் அடையவும் எவ்வளவு குறுகிய நேரம் செலவிடப்படுகின்றதோ அதில் தான் கண்காட்சி வெற்றியளிக்கின்றது. கண்காட்சியில் இருந்த பாக்கியநாதனின் இரு நூல்கள் (தூவியின் தசாம்சப் பகுப்பு முறை, நூலகர் கையேடு) இத்தகைய எளிய பகுப்பாக்கத்துக்கு உதவக் கூடியவை.

விற்பனை கண்காட்சியின் ஓர் முக்கிய அம்சம். ஆனால் கண்காட்சியில் உள்ள நூல்களில் இருந்து விற்பனைக்கென உள்ள நூல்களைத் தெளிவாகப் பிரித்து வைப்பது அவசியம். அத்த



(இடம்) அமைப்பாளர் முல்லை அமுதன், (வலம்) இராஜமனோகரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**Human Rights Watch - Report 2002 - Sri Lanka**

# அரசும் புலிகளும் மனித உரிமைகளை மதிக்கவில்லை

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு இருப்பதை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு ஆதாரங்களுடன் வெளியிட்டு உள்ளது. 1983 முதல் 60,000 பேர் கொல்லப்பட்டு இருப்பதாக குறிப்பிட்ட அவ்வறிக்கை புதிய சித்திரவதை பற்றிய முறைப்பாடுகள் ஜனவரியில் பதிவு செய்யப்பட்டு உள்ளதாக தெரிவிக்கிறது.

மனித உரிமை அமைப்புகளும் ஊடகங்களும் இலங்கையின் வடக்கு கிழக்கில் சுதந்திரமாக செயற்பட முடியாத சூழ்நிலை இருப்பதை சுட்டிக்காட்டிய அவ்வறிக்கை இலங்கை இராணுவமும் ஆயுதக் குழுக்கமும் புலிகளும் அவ்வமைப்புகள் மீதும் தனிநபர்கள் மீதும் அழுத்தங்களை பிரயோகித்து அவர்களது சுதந்திர செயற்பாட்டுக்கு தடையாக இருப்பதாகவும் தெரிவிக்கிறது. ஒக்ரோபர் 2000 முதல் நவம்பர் 2001 வரையான காலப் பகுதியில் வடக்கு, கிழக்கில் ஒரு ஊடகவியலாளர் கொல்லப்பட்டும் 5 பேர் இலங்கை பாதுகாப்பு படையினரால் துன்புறுத்தப்பட்டும் உள்ளது இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

இலங்கை பாதுகாப்பு படைகளின் எழுந்தமானமான கைதுகள், கைது செய்யப்பட்டவர்கள் காணாமல் போவது, காவலில் உள்ளவர்கள் கொல்லப்பட்ட சம்பவங்கள், பாலியல் வன்முறைகள், கூட்டுப் படுகொலைகள் ஆகியனவும் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது. அரச படைகளுடன் இணைந்துள்ள ஆயுதக் குழுக்களின் மனித உரிமை மீறல்களும் அம்பலப்படுத்தப்பட்டு உள்ளது. மேலும் 1994ல் சித்திரவதைக்கு எதிரான உடன்பாட்டில் கைச்சாத்திட்ட இலங்கையில்; சித்திரவதை செய்தவர்கள் யாரும் இதுவரை தண்டிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடப்பட்டு உள்ளது.

விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அரசியல் படுகொலைகள், தனிநபர் கொலைகள், சிறார்களை இயக்கத்தில் சேர்ப்பது, முஸ்லீம் வர்த்தகர்களை கடத்தியது, முஸ்லீம் சமூகத்தினர் மேற்கொண்ட போராட்டத்தை பலாத்காரமாக நிறுத்த முயற்சித்தது, அவர்களது நாளாந்த வாழ்க்கையை நிர்மூலமாக்கியது (மூதூர்) போன்ற உரிமை மீறல்களும் இவ்வறிக்கையில் சுட்டிகாட்டப்பட்டு உள்ளது. 2001ல் புலிகளின் செயற்பாடுகள் சர்வதேச அளவில் கட்டுப்படுத்தப்பட்டமையும் குறிப்பிடப்பட்டு உள்ளது.

---

→

கைய விற்பனைப் பிரிவு அன்று இருக்கவில்லை. விற்பனைக்குரிய நூல்களிலிருந்து தேர்ந்து தத்தமது நூல்களை வாங்க விரும்புபவர்கள் தங்கள் நிதி வசதிக்கு ஏற்ப நூல்களைத் தேர்வு செய்ய உரிய முறையில் விலை விபரமும் ஒரு விளம்பரமாக விற்பனைப் பகுதியில் இருந்தால் பயனுள்ளதாக இருக்குமல்லவா?

ஒரு நிறுவனரீதியில் இத்தகைய சேகரிப்புகள் மேற்கொள்ளப்பட்டு ஈழத்துத் தமிழ் நூல்களுக்கான ஒரு ஆவணக்காப்பகம் நிறுவப்பட்டு தமிழ் நூல்களுக்கான ஒரு சர்வதேச வைப்பகமாக அது வளர்ந்து உலகெங்கும் வெளியாகும் ஈழத்துத்தமிழ் நூல்களை ஆவணப்படுத்தி வைக்க முன்வரும் ஒரு சமூகநல அமைப்பு இன்றுவரை எம்மத்தியில் உதயமாகவில்லை. இருக்கும் அமைப்புகளுக்கும் இதை விட முக்கியமான பல 'பணிகள்' உள்ளதால் இத்தகைய 'வேலை மெனக்கெட்ட' முயற்சிகளில் தம் பெறுமதி வாய்ந்த நேரத்தை அவமேசெலவிட அவை தயாராகவும் இல்லை.

குரும்பசிட்டி கனகரத்தினம், முல்லை அமுதன் போன்ற தனி நபர்களின் ஆக்கபூர்வ முயற்சிகளை நம்பித்தான் தமிழினம் தன் நூலியல் தேவைகளுக்கு முகம் கொடுக்கப் போகிறதா?

*என் செல்வராஜா*
லூட்டன், பிரித்தானியா

## மனதின் நெருடல்கள்
# முல்லை அமுதன் பதில்

என் செல்வராஜா குறிப்பிட்ட நூல் பகுப்பு முறை, விற்பனைப் பிரிவு ஆகியவை பற்றி நானும் தற்போது சில முயற்சிகளில் ஈடுபட்டு உள்ளேன். நூல் கண்காட்சிக்கு கொண்டுவரப்பட்ட நூல்கள் பிரித்து பெட்டிகளில் வைக்கப்பட்டே கொண்டுவரப்பட்டது. ஆனால் அவற்றை ஒழுங்குபடுத்தி பிரித்து வைப்பதற்கு வேண்டிய ஆட்பலம் என்னிடம் இருக்கவில்லை.

இன்னும் குறுகிய காலத்தில் என்னிடம் உள்ள நூல்களை பகுத்து எனது வீட்டிலேயே ஒரு நூலகமாகவும் கண்காட்சியகமாகவும் அமைக்க முயற்சி எடுத்து வருகிறேன். இது நடைமுறைக்கு வரும்போது இப்போது உள்ள அசௌகரியங்கள் நீங்கும் என நம்புகிறேன். எனது நூல் காப்பகத்தை நிறுவனமயப்படுத்துவது எதிர்மறையான விளைவையே ஏற்படுத்தும். இன்று தமிழர் மத்தியில் உள்ள நிறுவனங்களே இதற்கு சான்று.

இந் நூல் கண்கட்சிக்கு ஊடகங்களும் ஒத்துழைப்பு வழங்கவில்லை என்பது மனவருத்தமான விடயம். இத்தனை ஆயிரம் நூல்களை கையாள்வதும், இலண்டனில் ஒரு கண்காட்சியை நடத்துவதில் உள்ள சிரமத்தையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். தொடர்ந்தும் உங்கள் ஆதரவை எதிர்பார்க்கிறேன்.

*சீதனம் சம்பந்தப்பட்ட திருமணங்களை பகிஸ்கரிப்போம்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போர் நிறுத்தம்



பேராசிரியர்
கோபன் மகாதேவா

## பேச்சுவார்த்தைத் தலத்தைப் பற்றிய தில்லுமுல்லுகள்

ஈழத்து இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்குரிய பேச்சுவார்த்தைகள் என்றாவது நடக்குமா என்ற சந்தேகம் சிறிது சிறிதாக மறைய ஆரம்பித்து உள்ளது. எனினும் அடுத்த கட்டப் பிரச்சினையாக எங்கு கூடிப்பேசுவது என்னும் கேள்வி எழுப்பப்பட்டு அதைப்பற்றிய வாக்குவாதங்கள் உலகரீதியாக நடக்கின்றன.

விடுதலைப் புலிகள் தென்னிந்தியாவை உசிதமான தலமென்று விரும்பித் தெரிந்தெடுத்து உள்ளனர். முதலில் அதை வதந்தியில் அறிந்த இந்தியாவிலே அதுவும் சென்னையிலே ஈழத் தமிழருக்கு எத்தனை உண்மை நண்பர்கள் உள்ளனர் என்பது பத்திரிகைச் செய்திகளில் இருந்து வெள்ளிடை மலையாகி உள்ளது. அந்தத் துக்ககரமான செய்திகளிலும் நன்மைகள் உண்டே எனக் கருதலாம்.

இந்தியாவின் தயக்கம் கண்டு பேச்சுக்களை நடத்துவதற்கு மிகவும் கரிசனமாக வருடக் கணக்காக உதவிவரும் நோர்வே அரசாங்கம் தம் நாட்டிலேயே இனிப் பேச்சுக்களைத் தொடரலாம் என முன்வந்தது ஒரு காப்புறுதியான நன்மை. ஈழத்துக்கும் நோர்வேயுக்கும் இடைத்தூரம் பல ஆயிரம் மைல்களெனினும் அங்கு பொதுப் பாதுகாப்பும் தலத்துடன் தொடர்பு வசதி முதலிய சாத்தியங்களும் இருக்கும். ஆனால் வேறு சில உசிதமற்ற அம்சங்களும் நோர்வேயில் உண்டு.

இன்னொரு நன்மை ஈழத்தமிழரும் சென்னைத் தமிழரும் ஒன்று சேர்ந்து தம்மினத்தை இந்து சமுத்திரத்துக்குள் தள்ளி அமுக்கி விடுவார்கள் என்று பிரசாரம் செய்துவந்த சிங்கள இனவாதிகள் இன்றாவது உண்மையை அறிய இந்தியத் தயக்கம் ஓர் புதிய வாய்ப்பைக் கொடுக்கின்றது.

நேபாளமோ உசிதமான பேச்சுத் தலமல்ல. ஆனால் தென்னிந்தியாவும் நோர்வேயும் தவறினால் இன்றுள்ள புதிய விட்டுக் கொடுப்பு நிலையில் பிரித்தானியாவை உசாவினால் இங்கேயே பேச்சுவார்த்தைகளை வைத்துக்கொள்ளும் சாத்தியங்களும் உள்ளன.

அத்துடன் முதற் கட்டப் பேச்சுக்களை யாவது மடுவிலே நடத்த ரணிலின் அரசாங்கம் விரும்புவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த தில்லு முல்லுகளின் முடிவுகளை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

## நிரந்தரப் போர்நிறுத்தம் :

இன்றுவரை இரு பகுதியினராலும் ஒப்பம் இடப்படவில்லை எனினும் நோர்வே தூதுவர்களின் உதவியுடன் இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலை புலிகளுக்கும் இடையில் ஒரு நிரந்தர யுத்த நிறுத்தத்துக்குரிய இணக்கங்களின் சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

24.12.2001 தொடக்கம் 23.01.2002 வரை புலிகள் தாமாகவே நல்லெண்ணத்தை ஏற்படுத்த அறிவித்து அரசினால் சில தினங்களில் ஏற்கப்பட்டு கடைப்பிடிக்கப்பட்டு வரும் போர் நிறுத்தம் நிரந்தரமாக்கப்பட முன்னர் இன்னும் ஒரு மாதத்துக்கு நீடிக்கப்படுவதன் மூலம் நிரந்தர நிறுத்தத்துக்குரிய அம்சங்களில் மிகவும் தெளிவாக இரு பகுதியினரும் இணக்கம் காணுவதற்கு அவகாசம் ஏற்படுத்தப் படலாம்.

அத்துடன் புலிகளினதும் தமிழர் தேசீயக் கூட்டமைப்பினதும் (TNA) வேண்டுதலுக்கு அமைய அரசாங்கம் கொள்கை அளவில் தளர்த்தியிருக்கும் உணவு எரிபொருள் மருந்துகளின் கட்டுப்பாட்டு நீக்கங்கள் வெற்றித் திறனுடன் அமுலாக்கப் படுகின்றனவா என்று புலிகள் மதிப்பீடு செய்யவும் இந்த அவகாசம் உதவும்.

குடா நாட்டுக்குள் மேற்படி பொருட்களைக் கொண்டு செல்ல வசதியாகப் புலிகள் ஒரு பெரும் பாதையைத் தம் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசத்துக்கூடாக ஒழுங்குசெய்து உதவுகின்றனர்.

நிரந்தரப் போர் நிறுத்தம் என்பது எவ்வளவு நிரந்தரமாக இருக்கும் என்னும் கேள்வி பொது மக்கள் மனதில் எழுவது இயற்கையே. இதற்குரிய விடை Memorandum Of Understanding (MOU) என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் புரிந்துணர்வு இணக்கப் பத்திரம் வெளிவரும்போதே தெளிவாகும்.

உதாரணமாக விடுதலைப் புலிகளின்மேல் 1998ம் ஆண்டு இலங்கை அரசினால் விதிக்கப்பட்ட தடை எந்தக் கட்டத்தில் விலக்கப்படும் என்பதும் புலிகளின் ஆயுதப் பிரயோகம் பற்றிய தற்காலிக இணக்கங்களிலும் மற்றும் எந்த மட்டத்தில் எங்கு என்ன கால எல்லைகளுக்குள் பேச்சுக்கள் முடிவாக்க வேண்டும் என்னும் ஏற்பாடுகள் முதலியவற்றிலுமே நிரந்தரப் போர் நிறுத்தத்தின் வருங்காலம் தங்கியுள்ளது.

தமக்கு விதித்துள்ள தடைகளை இக் கட்டத்திலேயே நீக்கவேண்டுமெனப் புலிகள் கேட்கக் கூடும் எனவும் கடைசியாக வந்த செய்தி ஒன்று தெரிவிக்கிறது.



சீதனம் ஒரு சமூகக் கொடுமை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏற்கெனவே நிறுத்தப்பட்டுள்ள போரோ பேச்சுவார்த்தைகளின் பாதை எப்படிக் கரடுமுரடாக இருப்பினும் எந்தெந்த எதிர்பாராத சோதனைகள் இரு பகுதியினருக்கும் அடுத்துள்ள சில மாதங்க ளுள் ஏற்படினும் நிறுத்திய போர் நிறுத்தியதாகவே இருக்கவேண்டும் என்பதே எல்லோரினதும் எதிர் பார்ப்பாக இருக்கும். இந்த விடயத்தில் ரணிலின் ஒத்துழைப்புக் கிடைக்கும் என அவருடைய அண்மைக்காலப் பேச்சுக்களில் இருந்து நம்ப கூடியதாக இருக்கிறது.

## சந்திரிகாவின் சங்கட நிலைமை :

கடந்த ஆண்டு மந்திரி ரவூப் ஹக்கீம் தன் SLMP பா.உ. சகாக்களுடன் சந்திரிகாவின் மக்கள் முன்னணி அரசாங்கத்தில் இருந்து வெளியேறினார். அதனால் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்த சந்திரிகா பாராளுமன்றத்தையே திரிசங்குச் சுவர்க்கத்தில் தொங்கவிட்டார். பின்னர் 2001 மார்கழி 5ந் திகதி புதிய பொதுத் தேர்தலை நடத்தியது தெரிந்ததே.

அதில் ரணில் விக்கிரம சிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணி 225 ஆசனப் பாராளுமன்றத்தில் 114 ஆசனங்களுடன் வெற்றி பெற்றது. தற்போது ரணில் SLMP முஸ்லிம்களுடனும் இந்திய தமிழ் பா.உ.களுடனும் மக்கள் முன்னணியை விட்டுப் பிரிந்த பேராசிரியர் பீரிஸ் திரு.திசநாயக முதலி யோருடனும் கூடி அரசாங்கம் அமைத்து உள்ளார். அவரின் தேர்தல் வாக்குறுதிகளின்படி விடுதலைப் புலிகளுடன் சமரசப் பேச்சுக்கள் தொடங்க ஆயத்தம் செய்வதும் தெரிந்ததே.

சந்திரிகா பாராளுமன்றத்தைத் தடைசெய்து வைத்த நாட்களில் ரணில் அவரின் மேல் சன நாயகத்துக்கும் அரசியலமைப்பு விதிகளுக்கும் முரண்பாடாக நடந்ததற்காக சந்திரிகாவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்றை கொண்டு வர முயன்றார். ஆனால் நடந்தேறிய பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று அரசாங்கம் அமைத்த ரணில் இப்போது தன் பிரேரணை நடவடிக்கையைப் பின்போட்டு மறுபரிசீலனை செய்கிறார்.

ஆனால் மக்களுக்குச் சந்திரிகாவில் நம்பிக்கையைக் குறைப்பதற்கு அதன்பின் இன்னும் இரண்டு தடயங்கள் கிடைத்துள்ளன. முதலாவது தேர்தல் காலத்தில் ரணிலைக் கொலைசெய்யத் திட்டம் தீட்டப்பட்டது என்ற புகார். இது புதிய அரசாங்கத்தினால் விசாரிக்கப்பட்ட போது அத்துரு கிரியாவில் பயங்கர ஆயுதங்களும் பதுங்கியிருந்த சில சதிகார அரசாங்க ஊழியர்களும் கண்டு பிடிக்கப்பட்டு உள்ளனர். இந்த ஏற்பாடுகள் சனாதிபதி சந்திரிகாவுக்குக் கட்டாயம் முன்னரே தெரிந்திருக்க வேண்டும். இக்குழுவினர் புலிகளுக்கும் எதிராகப் பல சதிகளைச் செய்தும் திரும்பவும் செய்ய ஆயத்தமாகியும் இருந்தனர் என்றும் கணிசமான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

அடுத்து 05-01-2000 தினத்தன்று கொலை செய்யப்பட்ட தமிழ்த் தலைவர் குமார் பொன்னம் பலத்தின் கொலைத் திட்டத்தையும் அதன் மூலகர்த்தாவையும் சந்திரிகா முன்னரே அறிந்திருந் தார் என்பதும் இப்போ வெளிவந்துள்ளது.

இவ்வுண்மைகளினதும் அரசாங்கத்துக்குத் தாவத் தாம் தயாரென்று தெரிவித்திருக்கும் 23 மக்கள் முன்னணிப் பா.உ.களினதும் தமிழரின் TNA பா.உ.களினதும் உதவியுடன் ரணில் வெற்றிகரமாகச் சந்திரிகாவைப் பதவியிலிருந்து வீழ்த்த முடியும்.

எனினும் புலிகளுடன் பேசி நாட்டின் இனப் பிரச்சினையையும் பொருளாதாரப் பிரச்சினையையும் தீர்த்தபின்னே சந்திரிகாவை விழுத்தவோ அவரின் இடத்தில் தானே சனாதிபதியாகத் தெரிவு செய்யப் படவோ ரணில் விரும்புவார். எனவே சந்திரிகா இன்னும் 3 - 4 ஆண்டுகளுக்குச் சங்கடப்பட்டுக் கொண்டே சனாதிபதியாகத் தொடர்ந்து பதவி வகிக்க முடியும் என எதிர்பார்க்கலாம்.

## சிவசிதம்பரத்தின் குரல் :

சிவசிதம்பரம் தமிழ்க் காங்கிரசில் தனது அரசியல் பயணத்தைத் தொடங்கினார். திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்துக்குப் பின் அதன் தலைவராகக் கடமையாற்றிப் பாராளுமன்றத்தின் உப சபா நாயகராகவும் பதவிவகித்தவர். பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தாங்கியபடி பல்லாண்டு களாகச் சென்னையில் மருத்துவ ஓய்வில் இருந்தார். இப்போது TNA சார்பில் நியமன உறுப்பினராகப் பதினெட்டு வருடங்களுக்குப் பின் பாராளுமன்றம் திரும்பியிருக்கிறார்.

தேகநிலை காரணமாகச் சில்லுக் கதிரை ஒன்றில் பாராளுமன்றத்துக்குத் தள்ளிச் செல்லப் பட்டுத் தன் ஆரம்பப் பேச்சிலே விடுதலைப்புலிகளே இன்று தமிழரின் ஏகப்பிரதிநிதிகள் என்றும் ரணிலின் புதிய அரசாங்கம் புலிகளுடன் மட்டுமே தாமதியாது யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்து தமிழரின் பிரச்சினைகளைத் தீர்க்குமுகமாக உடனே பேச்சுக் கள் தொடங்க வேண்டும் என்றும் கூறியிருக்கிறார்.

அத்துடன் மட்டக்களப்பிலும் வன்னியிலும் தேர்தலின் போது பதிவு செய்யப்பட்ட தமிழ் வாக்கா ளரைத் தம் வாக்குகளைப் பயன்படுத்தாமல் தடுக்கப் படையினருக்கு என்ன அதிகாரமுண்டு என த.வி.கூ சார்பிலும் இன்று ஒன்றுபட்டு உள்ள தமிழ்க் கட்சிகள் எல்லாவற்றினும் சார்பிலும் கேட்டுள்ளார்.

1976ன் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை அமுல் நடத்தாத த.வி.கூ. யின் தலைவராகிய சிவசிதம்பரம் தன் வயோதிபத்தில் ஏன் நியமன உறுப்பினராக பாராளுமன்றம் திரும்ப வேண்டும் என்று வெளி இளவட்டங்கள் சிலரின் குரல்களையும் நாம் கேட்க முடிகிறது. மீண்டும் சந்திப்போம்.□□□

***சீதனம் சம்பந்தப்பட்ட திருமணங்களை பகிஸ்கரிப்போம்.***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தேசிய நூலகம்

## சில சிந்தனைகள் (3)



என் செல்வராஜா
நூலகவியலாளர்

இலங்கையில் தேசிய நூலக ஆவணவியல் சேவைகள் சபையின் நோக்கங்களும் செயற்பாடுகளும் முன்னைய இதழில் கண்டோம். இச் சபையின் ஏழு பிரிவுகளின் செயற்பாடுகள் இவ்விதழில் சுருக்கமாக விளக்கப்படுகின்றன.

### நூலக அபிவிருத்திப் பிரிவு

இப்பிரிவே இச்சபையின் பிரதான நோக்கத்தை அடையும் வகையில் செயற்படுவதாகும். பொது நூலகங்கள், சிறப்பு நூலகங்கள், கல்வி நிறுவன நூலகங்கள் உள்ளிட்ட அனைத்து நூலகங்களுக்கு உரிய துறைசார் ஆலோசனை வழங்கும் பிரிவு இதுவாகும். நூலக சேவைகளைத் திட்டமிடல், நூலக சேவைகளுக்கான தர நிர்ணயத்தை வகுத்தல், மேற்குறிப்பிட்ட நூலக அமைப்புகளைத் தரம் பிரித்தல் (Grading), வாசிப்புப் பழக்கத்தை மக்களிடையே, சிறப்பாக பாடசாலை மாணவர் இடையே ஊக்குவித்தலுக்கான அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்தல், நூல் அன்பளிப்புகளை மேற்கொள்ளல், சர்வதேச நூல் உதவித் திட்டத்தின் (International Book Aid Programme) மூலம் இலங்கை அரசுக்கு அன்றாடம் வழங்கப்படும் ஆங்கில நூல்களை உள்ளூர் நூலகங்களுக்கு விநியோகித்தல், நூலக தளபாடங்கள், உபகரணங்களை வழங்குதல், கண்காட்சிகள் ஒழுங்கு செய்தல், தேசியநூலக நூல்விற்பனை நிலையத்தை நடாத்துதல் (கொழும்பில், சுதந்திர சதுக்கத்திலுள்ள தேசிய நூலக கட்டிடத்தின் நுழைவாயிலில் இந்த விற்பனை நிலையம் உள்ளது), பாடசாலை மற்றும் பொது நூலகங்களின் அபிவிருத்தித்திட்டம், பல்கலைக்கழக நூலகப்பாவனையாளர்களுக்கான ஒளிப்பேழைத் தயாரிப்பு திட்டம் ஆகிய வேலை திட்டங்கள் இப்பிரிவுக்கு உரியவையாகும்.

### நூலகக் கல்விப் பிரிவு

நூலகவியல் கல்வியை வழங்கும் பொறுப்பு இப்போது இந்தப்பிரிவுக்கு அளிக்கப்பட்டுள்ளது. பேராதனை, கொழும்புப் பல்கலைக்கழகங்களில் பட்ட பின்படிப்பாக பயிற்றப்படும் நூலக விஞ்ஞானக்கல்வியைக் கற்க வாய்ப்பற்ற பலருக்கு கல்வி பொதுத்தராதர உயர் தரப் பரீட்சைப் பெறுபேற்றுடன் நூலகவியல் தகவல் விஞ்ஞானப் பாட நெறியினை இது காலவரை இலங்கை நூலக சங்கம் என்ற அமைப்பே ஆரம்ப, இடைநிலை, இறுதி நிலை என்ற மூன்று தரங்களில் வழங்கி வருகின்றது. தமிழ், ஆங்கில, சிங்கள மூலங்களில் யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி ஆகிய இடங்களில் பரவலாக வார இறுதி வகுப்புகளாக நடைபெற்ற இப்பயிற்சி இன்று கொழும்பில் மட்டும் ஆங்கில, சிங்கள மூலங்களில் இடம்பெறுகின்றது. இலங்கை நூலக சங்கத்தின் மட்டுப்படுத்தப்பட்ட செயற்பாடுகளாலும் அதன் மாவட்ட இணைப்பாளர்களின் சுயநல நோக்கங்களாலும் தமிழ் மாணவர்கள் ஓரங் கட்டப்பட்டு விட்டனர். தேசிய நூலக ஆவணவியல் சேவைகள் சபையின் கீழ் இந்த நிலையில் என்ன மாற்றம் கொண்டுவரப்படும் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

நுலகக் கல்விப் பிரிவின் தற்போதைய வேலைத் திட்டங்களில் இந்த நீண்டகால அத்தியாவசிய அடிப்படை பயிற்சி நெறி பற்றிய திட்டம் எதுவும் இல்லாவிடினும், குறுகிய காலப் பயிற்சி நெறிகள், கருத்தரங்குகள், பட்டறைப் பயிற்சித் திட்டங்கள் (Workshop), தொடர்கல்வித் திட்டங்கள் (continuing education), சேவைக்காலப் பயிற்சி நெறிகள், தேசிய நூலக விரிவுரைத் தொடர்கள், நூலக விஞ்ஞானத் தொழில்நுட்பப் (Library Science technology) பயிற்சி நெறிகள், நூலகப் பயிற்சிக்கான பல்வேறு உபகரணங்களையும், கற்பித்தல் சாதனங்களையும் தயாரித்தல் ஆகியன நடை முறையில் உள்ளடங்குகின்றன.

### நூல் அபிவிருத்திப் பிரிவு

இலங்கையைப் போன்ற மூன்றாம் உலக நாடுகளில் எழுத்தாளர்கள் தாமே தமது நூலின் வெளியீட்டாளராயும், விநியோகத்தராயும் அமைவது இயல்பாகி விட்டது. குறிப்பிட்டுச் சொல்லக்



சீதனம் ஒரு சமூகக் கொடுமை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூடியதாக லேக் ஹவுஸ், குணசேன, திசார போன்ற ஒரு சில வெளியீட்டு நிறுவனங்கள் வர்த்தக நோக்கில் இயங்கி வருகின்ற போதிலும் இடைத் தரகர் தொல்லையால் சாதாரண எழுத்தாளர்கள் இந் நிறுவனங்களை அணுக முடியாது போய் விடுகின்றது. இந்நிலையில் நூல் அபிவிருத்திப் பிரிவின் தலையாய பணியாக அமைவது இலங்கை யைத் தளமாக கொண்டு இயங்கும் எழுத்தாளர்க ளுக்கும் வெளியீட்டாளர்களுக்கும் பல்வேறு வேலை திட்டங்களின் வாயிலாக உதவுவதாகும். நான்கு படி நிலைகளில் இத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.



1. ஆண்டொன்றுக்கு சராசரி 100 புது நூல்கள் என்ற விகிதத்தில் எழுத்தாளர்களிடமிருந்து நூலின் மூலப்பிரதியைப் பொறுப்பேற்று அதை பரிசீலனை செய்து தரமுள்ளதாயின் அதன் வெளியீட்டுச் செலவினை முற்பணமாக வழங்கல். இதன் பிரதிபலனாக எழுத்தாளர் தனது நூலின் பிரதிகளை விற்பனை விலையில் கணித்து முற்பணத்தொகையை ஈடு செய்யும் வகையில் நூலகச்சபைக்கு அச்சிட்ட நூல்களை வழங்க வேண்டும்.

2. எழுத்தாளர் தானே சுய முதலீட்டில் வெளியிட்ட ஒரு நூலின் கணிசமான பிரதிகளை சபை கொள்வனவு செய்தல்.

3. பிரபல்யமான நூல்களின் மறுபதிப்பிற்கான செலவின் ஒரு பகுதியை பதிப்புரிமையாளருக்கு வழங்கி ஊக்குவித்தல்.

4. தானே எழுதி வெளியிட்ட நூலை அந்த ஆசிரிய வெளியீட்டாளருக்கு தேசிய நூலக விற்பனை நிலையத்தின் வாயிலாகவும், சபை ஒழுங்கு செய்யும் கண்காட்சிகளின் வாயிலாகவும் விற்பனை செய்து உதவுதல். இதன் மூலம் வர்த்தகக் கழிவு என்ற பெயரில் பணத்தை எழுத்தாளன் இழப்பது தவிர்க்கப்படும்.

## வெளியீட்டுப் பிரிவு

பழைய இலக்கிய நூல்களையும், ஏட்டுச் சுவடிகளையும் பதிப்பித்தலும் அச்சிடுதலும் இப் பிரிவின் பணியாகும். அத்துடன் தேசிய நூலக வெளியீடுகளை வெளியிடும் முழுப் பொறுப்பும் இப்பிரிவுக்குரியதாகும். நூலகச் செய்தி என்ற மும் மொழியிலான காலாண்டு அறிவியல் சஞ்சிகையை தேசிய நூலக ஆவணவியல் சேவைகள் சபை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தகுந்தது. முன்னர் நூலக சேவைகள் சபையாக இயங்கிய காலத்திலிருந்தே இது ஓரளவு ஒழுங்காக வெளியி டப்பட்டு வந்துள்ளது. நூலகவியல் சார்ந்த கட்டுரை களும் செய்திகளும் இதில் பிரசுரமாகின்றன. மும் மொழிச் சஞ்சிகையாக வெளிவந்த போதிலும் சிங்கள ஆங்கிலக் கட்டுரைகளே இதில் இடம் பெறுகின்றன. அத்தி பூத்தாற் போன்று பல வருடங்களுக்கு ஒரு முறை தமிழ் ஆக்கங்கள் இடம் பெறுவதுமுண்டு.

தேசிய நூலக ஆவணவியல் சேவைகள் சபை, சர்வதேச ஆவண நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ளும் வேலை திட்டங்களின் விளைவாகச் சில வழிகாட்டிகளையும், அகராதிக ளையும் வெளியிட வேண்டிய கட்டாயம் உள்ளது.

1.சர்வதேச தராதர நூல் எண் (International Standard Book Number) , சர்வதேச தராதர பருவவெளியீட்டு எண் (International Standard Serial Number) ஆகியன வழங்கல் தொடர்பான தேசிய முகவராகச் செயற்படுவதால் அதற்கான அகராதி, வழிகாட்டிகள் ஆண்டு தோறும் இச்சபையினால் வெளியிட்டு ஜெனிவாவிலுள்ள மத்திய நிலையத்துக்கும் அங்கத்துவ நிறுவனங்களுக்கும் விநியோகிக்கப்படல் வேண்டும்.

2. சர்வதேச தராதர இசை வடிவங்களுக்கான தராதர எண் வழங்கும் தேசிய முகவராகவும் அண்மையில் பொறுப்பேற்றுள்ளதால் அதற்கான வழிகாட்டிகள் அகராதிகளைத் தொகுத்து விநியோகிக்க வேண்டிய கடப்பாடும் இப்போது உள்ளது.

3. நூல்களுக்கான கோட்டுக் குறியீடு (Barcode) களை தயாரித்து வழங்கும் பொறுப்பும் வெளியீட்டுப் பிரிவிடம் விடப்பட்டுள்ளது.

## முகாமைத்துவப் பிரிவு

ஆண்டறிக்கைகள் தயாரிப்பது முதல் புள்ளிவிபரங்கள் சேகரிப்பதும் அதன் அடிப்படையில் நூலக முகாமைத்துவத் திட்டங்களை பரிந்துரைப் பதும் இப்பிரிவின் கடமைகளாகும்.

## நிர்வாகப் பிரிவு, நிதிப் பிரிவு

இலங்கை தேசிய நூலகமும் ஆவண நிலையமும் உள்ளிட்ட சகல அங்கங்களினதும் நிதி மற்றும் நிர்வாகம் சார்ந்த பொதுக் கடமை- களை நிறைவேற்றுவது இப்பிரிவாகும்.

அடுத்த இதழில் இலங்கைத் தேசிய நூலகமும் ஆவணநிலையமும் என்ற தேசிய நூலக அமைப்பு எவ்வாறு இயங்குகின்றது எனக் காண்போம்.



*சீதனம் சம்பந்தப்பட்ட திருமணங்களை பகிஸ்கரிப்போம்.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பசியும் பண்பும்

மானம் ஒழுக்கம் எனும் இவை யாவையும்
மாயப் பதங்களடி—அவை
ஊனம் வளர்க்க ஒரு பிடியற்றவர்க்(கு)
உண்மையில் ஏதுக்கடி
ஈனத் தொழில் உடல் காட்டலென்போர்—பசித்
தீயை அடக்குவரோ—அவர்
ஞானத்தைத் தூக்கித் தெருவினில் வீசி
நடத்தையை மாற்றிடடி

உண்ண உணவிலை என்றிடும் போதினில்
பெண்மையிங் கேதுக்கடி—கொடு
உன்மத்தருள்ள வரையில் உனக்கு
உயர் விலை தேறுமடி
மண்ணினுட் சென்று மட்காகு முடலை
மடையர் ரசிக்கட்டுமே — அந்த
மன்மதக் குஞ்சுகளின் பணமுந்தன்
மடியை நிறைக்கட்டுமே

சட்டங்களாற் சமுதாயமென்றாவது
சாந்தியைக் கண்டதுவோ—வெறுந்
திட்டி வரப்புகள் சாக்கடை நாற்றம்
திருந்திட வைத்தனவோ
மட்டிகள் யாத்த பழஞ் சமுதாய
மடமையை மாற்றிடுவீர்—எவர்
கெட்ட பிழைப் பெனிலும் விழித் தீயிலக்
கேடரை ஓட்டிடுவீர்

யுகசாரதி

# பெண்ணடிமை

கட்டிய பெண்ணினைக் காட்டினில் விட்டுக்
கழன்றவன் உத்தமனாம்— அந்த
மட்டியை மீண்டும் சுயம் வரம் வைத்து
மணந்தவள் உத்தமியாம் 1

குட்டை பிடித்தோர் குரங்கினைப் போலக்
குடிலிற் கிடந்தவனை—ஒரு
பெட்டியில் வைத்துச் சுமந்து பாரத்தையைச்
சேர்த்தவள் உத்தமியாம் 2

கொண்ட பொருளது யாவுமழித்தொரு
கூத்தியைச் சேர்ந்தவனைக்—கண்
கண்ட தெய்வம் எனக் கால் பிடித்தாள்—
அந்தக்
கண்ணகி உத்தமியாம்
வண்டில் விடுங் கதை யாருக்குத் தேவை
வளர் இளந் தங்கையரே—இந்தப்
பொண்டில் புருசர்கள் நீதியில் வேற்றுமை
போக்கச் சினந்தெழுவீர்

கட்டியவன் வர தட்சணை கேட்டுக்
கழுத்தை நெரிக்கையில் வான்—ஒலிப்
பெட்டியில் பாடுது பாட்டு அம்மூட
மட்டியைத் தெய்வமென்றே
முட்டக் குடித்த அம் மூடன் உனது
முதுகைப் பிளக்கையிலே— கசட்
செட்டில் முழங்குதத் துட்டனின் காலினைத்
தொட்டு வணங்கிடென்றே

உன்னைக் கெடுத்தொரு உண்மையை மூட
உதித்த இக் காவியங்கள்—அட
இன்னும் இருக்கையில் இந்தவுலகினில்
ஏறும் புகழுடனே
என்ன விடுதலை வேண்டிக் கிடக்குது
ஏனடி சோம்புகிறாய்—அடி
அன்ன நடையினளே மிதி யாவையும்
ஆனை நடை நடந்தே

(குறிப்பு1. நளன், தமயந்தி. 2. நளாயினி)



சீதனம் ஒரு சமூகக் கொடுமை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கார்மேகம் கண்காட்டத்தேவையில்லை....!

கள்ளிச்செடியும்
துளிர்விடா
கற்பாறை நிலத்திலே
நெல் வளர்க்கும்
பிரயாசைக்காரர்...!

உவர் நீரில்
உப்பெடுக்கும்
இரசாயனவியலாளர்...
நாங்கள்
வெள்ளி பூக்கமுன்னே
எழுந்து
வேலைக்குச்செல்பவர்கள்

கார்மேகம்
எமக்கு
நீர்
வார்க்காவிடினும்
கலங்காதவர்...!
மழைக்காக
விளை
நிலத்திலே
குந்தியிருக்காது
வியர்வை
நீர்

ஊற்றி
பயிர்வளர்க்கும்
பாட்டாளி... !
குப்பனுக்குத் தெரியும்
எப்போ
எதை விதைப்பதென்று

கப்பல்கட்டி
கடலெங்கும் ஓட்டினோமே
எவன் கற்றுத்தந்தது...
புயல்
வரும் தேதியை
வருமுன் சொன்னானே
எந்தப்பயல்
சொல்லித்தந்தான்... ?

அறிவிலே
நாம்
இளைத்தவரல்ல
கடும்
உழைப்பிலும்
குறைந்தவரல்ல
என்ன
பொன்விளையும் பூமியை

அன்னியன் தீயிட்டு
பொசுக்குகிறான்
அயல்நாடு
ஓடிப்போனோம்
அதற்காய் எமை
பஞ்சப்பரதேசியாய்
நடத்துவதா.. !
நீ
வில்லோடு
அலைந்த காலத்திலேயே
நாம்
புட்பகவிமானத்தில்
பறந்தவர்கள்
நீ
கட்டுமரத்தில்
மிதந்தபோதே
நாம்
கப்பல்களில்
வந்தவர்கள்...
இனியும்
எம் காலம்
வரும்
வாழ்ந்து காட்டுவோம்...

மட்டுவில் ஞானகுமாரன் (ஜேர்மனி)

---

# ஆடைக் குறைப்பு (சந்தம் வேறு)

எட்டிரண்டு முழத்துணி தன்னையே
கட்டுகின்ற நம் கன்னியர் அஃதினை
விட்டுக் கட்டைக் கவுணையணிந்திடல்
வீட்டிலேயொரு சிக்கனச் செய்கையாம்
முட்டுக் காலதன் மேற் தெரிந்தாற் குடி
மூழ்கிப் போவதோர் நாளிலும் இல்லையாம்
கெட்ட நோக்கில் எதனையும் பார்க்கிற
கேடர்க்கேயிது கேவலமாகுமாம்

ஆதலால் எனதன்பிளந் தங்கைகாள்
தீது சிற்றுடையென்றிடு மூடரின்
ஓதலுக்குச் செவியளியாமலே
உடை குறைத்தொரு சிக்கனம் பேணுவீர்
பேதமுற்ற களங்க மனத்தொடு

பெண்மை தன்னை இகழ்கிற காமுக
காதகக் குண நாய்கள் முகத்திலே
காறியெச்சிலுமிழ்ந்து துரத்துவீர்

பண்டைக் காலப் பருவ மகளிர்கள்
பண்பு கெட்டுத் தவறிடவில்லையோர்
துண்டைத் தான் இள மார்பினிற் கட்டினர்
தூய கற்பின் இலக்கணங் காட்டினர்
கெண்டைக் காலதன் மேற் தெரிந்தாலது
கேடென்றெண்ணும் உலுத்தர்தம் தீக்குணச்
சுண்டைக் காய்த் தலை
சுக்கெனத் தூள்படத்
தூய மாதர் அணி நடை செய்குவீர்

யுகசாரதி

*சீதனம் சம்பந்தப்பட்ட திருமணங்களை பகிஸ்கரிப்போம்.*

www.tamilarangam.net

**ஒரு உண்மைக் கதை**

# வெவ்வேறு வழக்குகளில் இளைஞர்களுக்கு மூன்று ஆண்டுகளும், அறு மாதங்களும் சிறை

அஸ்போர்ட் கென்ற் பகுதியில் வசித்த இரு இளைஞர்கள் இரு வேறு பாலியல் வழக்குகளில் குற்றவாளிகளாக கணிக்கப்பட்டு உள்ளனர். செப்ரம்பரில் இவர்களுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டது. இவ்விருவரும் பாதிக்கப்பட்ட பெண்களுடன் தரக்குறைவாக நடந்து கொண்டதாக குற்றம் சாட்டப்பட்டு உள்ளது. ஒருவருக்கு மூன்று ஆண்டுகளும் மற்றயவருக்கு ஆறு மாதங்களும் தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது.

இவ்விரு இளைஞருமே தம் மீது ...

நண்பர் தெரிவித்தார்.

மிக அண்மையில் பிரித்தானியாவுக்கு வந்த மற்றைய இளைஞருக்கு 6 மாத சிறை அளிக்கப்பட்டு இருக்கிறது. பெல்த்தம் குடிவரவு நீதிமன்றத்துக்கு தனது தஞ்ச வழக்கு தொடர்பாக சென்றுவிட்டு திரும்புகையிலேயே இச்சம்பவம் இடம்பெற்று உள்ளது. ரெயில் நிலையத்தில் வைத்து இளம் பெண்ணொருத்தியுடன் தகாத முறையில் நடந்து ...

# சிறையில் ஒரு குரல்

வொன்ஸ்வேர்த் சிறைச்சாலை
வொன்ஸ்வேர்த்
இலண்டன்
24 - 01 - 02

அன்புடன் டேவிட் அண்ணா

உங்கள் கடிதம் கிடைத்தது. சுற்றிலும் முகமறியா மனிதரிடையே எதிர்காலமே கேள்விக்குறியாகி விட்ட நிலையில் வாழும் எனக்கு, வெளியுலகில் இருந்து இடைக்கிடையே வரும் கடிதங்களே உயிரூட்டுகின்றன.

இப்பொழுது என்னை முன்னைய சிறையிலிருந்து வேறு இடத்திற்கு மாற்றிவிட்டார்கள். இது முன்னர் இருந்த சிறைச்சாலையை விட மிகத் துன்பமான சூழலுக்கு என்னைத் தள்ளி இருக்கிறது. என்ன காரணமோ தெரியவில்லை திடீரென்று அங்கிருந்து மாற்றிவிட்டார்கள். இதுதான் பிரித்தானியாவிலே 150 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் வோன்ஸ்வேர்த் சிறைச்சாலை. பிரித்தானியாவிலே உள்ள மிகக் கேவலமான சிறைச்சாலை இதுவென இங்கு முன் அனுபவமுள்ளவர்கள் பேசிக்கொள்கிறார்கள்.

எமது சொந்த உடுப்புகளைக் கூட எங்களால் இங்கு அணிய முடியாது. இங்கு தருவதைத் தான் அணிய வேண்டும். சாப்பாடும் கஸ்டம் தான். ஒரு விதமான வசதியுமில்லாத இடத்தில் கொண்டு வந்துவிட்டிருக்கிறார்கள். இப்பொழுது ஒரு செல்லில் 2 பேர் இருக்கிறோம். 24 மணித்தியாலமும் உள்ளே தான். சாப்பாட்டுக்கு மட்டும் திறந்துவிடுவார்கள்.

வேலை ஏதாவது செய்யலாமா என்று முயற்சி பண்ணுகின்றேன். மேலும் என்னை வந்து சந்திப்பதென்றால் ரெலிபோனிலே இங்கு விசாரித்தால் தெரியும். நான் மேலும் விபரங்கள் கிடைத்ததும் தெரியப்படுத்துகின்றேன். எனது பிரிவு C என்று தான் தெரிவிக்கப்பட்டது. ஆனால் நான் இருந்த முதல் சிறைச்சாலை C பிரிவு. இப்பொழுது B பிரிவு சிறைக்கூடத்துக்கு மாற்றப்பட்டது ஏன் என்று தெரியவில்லை. இதைப்பற்றி எனது சொலிசிற்றரிடம் தான் கேட்டுத் தெரியலாம் என்று நினைக்கின்றேன். தெரிந்து தான் என்ன செய்வது? ஏல்லாம் சடுதியாக நடந்து முடிந்து விட்டது. மூன்று வருடங்களை அப்பீல் வசதி மறுக்கப்பட்ட நிலையில் இங்கு கழித்தேயாக வேண்டும்.

நான் என்னுடைய வாழ்க்கையில் இதுபோன்று பல தவறுகளை அதன் தீவிரம் புரியாமல் ஏற்கெனவே பலதடவைகள் செய்திருக்கின்றேன் என்பதை இப்பொழுது தனிமையில் இருந்து சிந்திக்கும் போது உணர்கின்றேன். அப்போது என்னைத் தட்டிக் கேட்கவும் திருத்தவும் ஏன் எவரும் முற்படவில்லை? ஒருவேளை தவறை உணர்ந்து கொள்ளும் மனப்பக்குவம் ஏற்படவில்லையோ? திருத்த முடியாத மனிதப்பிறவியாக இனங்காணப்பட்டேனா? திருத்தி வழிகாட்டக்கூடியவர்கள் என்னை அணுக முடியாதவாறு இரும்புத்திரை ஒன்றை என்னைச்சுற்றி நானே அமைத்துக் கொண்டேனா? புரியவில்லை.

அன்று நானும் சந்திரனும் மதுபோதையில் தெருவில் அந்த வெள்ளைப் பெண்ணுடன் சேட்டை விட்டது தவறே. அதை பாலியல் வன்முறைக்கு முயற்சித்ததாகச் சோடித்து வழக்கைத் திசை திருப்பியது தான் இன்றும் என்னால் சீரணிக்க முடியவில்லை. எப்படியிருந்தும் என் மேல் சுமத்தப்பட்ட இந்தக் குற்றச்சாட்டை நான் முழுமையாக ஒப்புக்கொள்ளா விட்டாலும் அரச தரப்புச் சட்டத்தரணி சம்பவத்தையும் அது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நேர்ந்த சந்தர்ப்பத்தையும் எதிர்த்தரப்பின் சாட்சியங்களையும் எனது பக்கத்து ஒரே சாட்சியான சந்திரனின் குழப்பத்தையும் பயன்படுத்தி ஜுூரர்கள் பன்னிருவரின் தீர்ப்புக்கு வழக்கை விட்டுவிட்டார்கள். அதனால் என்னால் ஒன்றும் செய்யமுடியவில்லை.

நீங்கள் கூறியது போல சுயபரிசோதனை செய்து என்னில் உள்ள குறைகளைக் கண்டு களைய இங்கு நான் வாழும் நாட்கள் உதவக்கூடும். அதற்கான அறிவைப் பெறும் நோக்குடன் இங்குள்ள சிறைச்சாலை நூலகத்தைத் தான் நாடி வருகின்றேன்.. இங்கு நூலக வசதி குறைவு. தமிழ் நூல்கள் அதிகம் இல்லை. நான்கு நூல்கள் தான் இருந்தன. இதைவிட வெளியிலிருந்து அனுப்பும் பேப்பர்கள் வாசிப்பேன். ஆங்கிலப் பத்திரிகைகள் ஒவ்வொரு நாளும் யாராவது ஓடர் பண்ணி வாங்கும வெள்ளையர்களிடம் இரவல் வாங்கி வாசிக்கலாம். முன்னைய சிறைச்சாலையில் இருந்த நூலகத்தில் கணிசமான தமிழ் நூல்கள் இருந்தன. இடைக்கிடை ஆங்கில அகராதியும நூல்களும் எடுத்துப் படிப்பது வசதியாக இருந்தது.

சனி ஞாயிறு தினங்களில் இங்கு வெளியே விடமாட்டார்கள். கிழமை நாட்களில் பின்னேரம் 2 - 4.30 மணி வரை குளிக்க, போன்பண்ண என்று வெளியே விடுவார்கள். காலையிலே 8 - 9 மணி வரை வெளியே தோட்டத்திலே சுற்றித்திரிய விடுவார்கள். மற்றும்படி இரண்டு பேர் உள்ள ஒரே செல் தான். முன்னைய சிறையில் உள்ளேயே விளையாடுவதற்கு ஜிம்முக்கு செல்வதற்கு வசதிகள் இருந்தது.

கண்ணதாசனின் மனவாசம் என்ற நூலை வாசிக்கும் படி கருணா எழுதியிருந்தார். முடிந்தால் எடுத்து அனுப்பவதாகவும் எழுதினார். உங்களுக்கு அது கிடைத்தால் எனக்கு அனுப்பி வைக்கவும். கவிஞர் கண்ணதாசனின் சுயசரிதையாம் அது.

மேற்கொண்டு என்ன செய்வது என்று தெரியாமலே தற்போதைய நிலையில் இருட்டில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றேன். வழக்கு நடந்த கொண்டிருந்த வேளை அவர்கள் திரும்பவும் என்னை சிறையில் சந்தித்து விசாரித்த பொழுது நான் பாலியல் வன்முறைக்கு முயற்சி செய்யவில்லை என்றும் அவளது அபாண்டக் குற்றச்சாட்டு குடிபோதையிலிருந்த என்னை ஆத்திரமூட்டச் செய்து தூஷண வார்த்தைகளால் திட்டநேர்ந்ததென்றும் கூறினேன். சம்பவத்தின் பின்னர் நான் ஏன் அவளைப் பின்தொடர்ந்து சென்றேன் என்று கேட்டார்கள். நான் துர்நோக்கத்துடன் வேண்டுமென்று தான் பின்னால் சென்றேன் என்றும் தமது சந்தேகத்தைத் தெரிவித்தார்கள். மேலும் நான் நிரபராதியாக இருந்திருந்தால் சம்பவம் நடந்த அன்றே ஏன் பொலிசுக்கு அறிவிக்கவில்லை என்றும் தாம் ஒரு மாதம் கழித்து என்னைக் கைதுசெய்யும் வரை ஏன் தெரியாதது போல் இருந்தேனென்றும் கேட்டார்கள். தம்மிடம் சம்பவம் பற்றித் தெரிவிக்காமல் ஒரு வழக்கறிஞருடன் தொடர்பு கொள்ள வேண்டிய அவசியம் என்னவென்றும் தமது சந்தேகத்தைக் கிளப்பினார்கள். அந்தப்பெண் வழியில் இருந்த கடைக்காரரிடம் சென்று அபயம் தேடியதும் அவர் துணைக்கு அவளுடன் வந்ததும் அது பின்னர் சம்பவத்தைப் பூதாகரமாக்குமென்றும் என்னால் ஏன் முன்கூட்டியே உணர முடியாது போயிற்று என்பது எனக்குப் புரியவில்லை. மறுநாள் நான் பொலிசில் சென்று முதல்நாள் நடந்ததைக் கூறியிருந்தால் ஒரு வேளை எனது தண்டனைக்காலம் குறைக்கப்பட்டிருக்குமோ என்றும் என்னில் சிறிது நம்பிக்கை பிரித்தானிய நீதிமன்றத்துக்கு ஏற்பட்டிருக்குமோ என்றும் இன்று சிந்திக்கின்றேன்.

மேலும் நீதிமன்றத்தில் சாட்சிகள் இருவருமே எதையும் தாங்கள் கண்ணால் கண்டதாகக் கூறவில்லை. ஆனால் நாங்கள் வீதியால் சென்றதையும் அந்தப் பெண் வீதியால் வந்ததையும் கண்டதாகவே கூறினார்கள். அந்தப் பெண் குழப்பமடைந்திருந்ததையும் தாம் கண்டதாக கூறினார்கள். அந்த இரு சாட்சிகளில் ஒருவர் இந்தியர். அந்த இந்தியரை பொலிசார் வற்புறுத்தி சாட்சியளிக்கக் கூப்பிட்டதாகவும் வராவிட்டால் அவரையும் விசாரணை செய்யப்போவதாகப் பயமுறுத்தியே அவரைக் கொண்டு வந்தார்கள் என நாம் கோர்ட்டில் கேள்விப்பட்டோம். அது ஏன் ஜுூரர்களின் கண்ணில் எனக்குச் சாதகமாகப்படவில்லை என்று புரியவில்லை. ஒரு வேளை பிரதிவாதியான பெண் ஒரு ஆசிய நாட்டவளாகவும், நான் ஒரு வெள்ளையனாகவும் இருந்திருந்தால் வழக்கின் தீர்ப்பை அது மாற்றியிருக்குமோ என்றும் எண்ணத் தோன்றுகின்றது.

முன்னைய சிறையில் கணனி வகுப்புக்குப் போவதற்கு தெரிவிலே என்னை எடுத்திருந்தார்கள். அது தான் முதன்முதலாக கொம்பியூட்டர் பழகக் கிடைத்த சந்தர்ப்பம். அதனால் கஸ்டப்பட்டுப் பழக முயன்றேன். அடிப்படை இல்லாமல் நேரடியாக IT work shop இல் பங்கேற்பது கடினமாகவே இருந்தது. கிழமைக்கு 7 பவுண்ஸ் பணமும் தந்தார்கள். சிறை மாறியதும் எல்லாம் நின்று விட்டது. இங்கும் கணனித் தொழில்நுட்பப் பயிற்சிக்கு விண்ணப்பித்திருந்தேன். கிடைக்க எவ்வளவு நாள் எடுக்கும் என்று சொல்ல முடியாது என்கிறார்கள். இப்பொழுது நான் E.S.O.L வகுப்புக்குத் தான் போகிறேன். English as Second Language என்னும் வகுப்பு. இங்கு வந்ததும் அதில் பயில அனுமதி கிடைத்தது. அந்த வகுப்பு திங்கள், செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் பின்னேரம் 2 மணி தொடக்கம் 4 மணி வரை நடக்கும். மற்றும் படி திங்களும் செவ்வாயும் காலை 10 - 11 வரை ஜிம்முக்குப் போவதுண்டு.

இப்பொழுது நான் அடைக்கப்பட்டிருக்கும் சிறைச்சாலையில் 2000 பேருக்கு மேல் இருக்கிறார்கள். அதனால் ஒவ்வொன்றுக்கும் றுயவைபெ டளைவ் தான். எப்பொழுதும் ஒரு கியு வரிசை இருக்கும். இவைகளிலும் பல பிரச்சனைகள் உண்டு. நிற வேற்றுமை, நாட்டு வேற்றுமை என்று இங்கும் உண்டு. எல்லோரும் அப்படி இல்லையாயினும் அரைவாசி வீதமானோர்

*சீதனம் சம்பந்தப்பட்ட திருமணங்களை பகிஸ்கரிப்போம்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஒரு உண்மைக் கதை

இப்படியானவர்கள் போலத் தென்படுகின்றார்கள். அதிலும் சிலர் அவர்களது தேவையையொட்டி உதவி செய்தால் கண்டு கொள்ளமாட்டார்கள். எனக்கு இது புது அனுபவமும் முதல் அனுபவமும் கூட. எல்லோருடனும் ஆங்கிலத்தில் கதைக்க ஓரளவு தெரிந்திருப்பதால் பல்வேறு பிரச்சனைகளைத் தவிர்த்துப் போக உதவுகிறது. இதுவும் ஒரு வகைப்பயிற்சியாகவே கருதுகின்றேன். மற்றும்படி சாதாரண சூழலைவிட முரணானதாகவே அனைத்தும் இருக்கின்றன. வெள்ளைகள் எதையும் தங்களுக்கு முதலிடமாகவும், தங்களுக்கு சாதகமாகவும் பயன்படுத்துவார்கள். சகிப்புத்தன்மையை வளர்த்துக் கொள்வது இங்கே மிகவும் அத்தியாவசியமாகப்படுகின்றது.

இங்கு எமது கட்டிடத்தில் ஒரே ஒரு இலங்கையர் தான் இருக்கிறார். அவர் காரால் ஒருவரை மோதியதால் இரண்டரை வருடம் சிறைத்தண்டனை கிடைத்துள்ளது. இவருக்கு 49 வயது. குடும்பகாரர். இவர் இப்பொழுது இங்கு தனது தண்டனையை அனுபவிக்கின்றார். லண்டனில் இன்று கண்மண் தெரியாது காரோட்டும் எவருக்கும் இந்த இலங்கையரின் நிலை ஏற்படலாம். பிரச்சினை என்று வந்த பின் தானே அதைப்பற்றிக் கவலைப்படுகின்றோம். அதை அனுபவத்தில் உணரும் வரை நாம் எல்லோரும் ஹீரோக்கள் தான்.

கறுப்பினத்தவர்கள் அரைவாசிக்கு மேல் இங்கு உள்ளனர். இங்கு கட்டுப்பாடு அதிகம். அதனால் எல்லோரும் அமைதியாகத் தான் காணப்படுவார்கள். சாப்பாடு இங்கு முன்னைய சிறையை விட மிக மோசம் தான். ரஷ்யாவிலே உருளைக்கிழங்குடன் சீவித்த மாதிரி 7 மாதம் இங்கு உதவாத சாப்பாடு. ஆனால் இங்கு கைச்செலவுகள் செய்யலாம். அறைக்கு மின்சார வசதி இல்லை. இரவு 11 மணிக்கு மின் வெளிச்சத்தை அணைத்தால் காலை 6 மணிக்கு மீண்டும் போட்டுவிடுவார்கள். ஏறவைஉா வெளியே தான் உள்ளது.

இப்பொழுது இருக்கும் இடம் ரூட்டிங்கில் இருந்து காரிலே வருவதானால் 15 நிமிட நேர தூரம் என்று இங்கு பார்க்க வந்தவர்கள் சொன்னார்கள். அப்பா அம்மாவுடன் இங்கு வந்தபிறகு தொடர்பில்லை.

வெளியே விடுவார்களோ என்பது தான் தெரியாமல் குழப்பமாக உள்ளது. தண்டனைக்காலம் முடிந்ததும் என்னை இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்போவதாக இங்குள்ளவர்கள் சொல்லுகிறார்கள். ஆனபடியால் தண்டனையைக் குறைத்து விரைவிலே வெளியே வந்தால் நாட்டுக்குத் திருப்பி அனுப்புவதாக இருந்தாலும் பிரயோசனமாக இருக்கும்.. நான் இரண்டு முடிவையும் ஏற்கத் தயாராகவே உள்ளேன்..

எல்லாம் காலப்போக்கில் சரிவரும் என்று எனக்கு நானே சமாதானம் சொல்லும் மனநிலையிலே இப்பொழுது இருக்கின்றேன். அண்ணனும் மச்சானும் வெளியிலிருந்து எனக்கு வேண்டிய சகல உதவிகளையும் செய்கிறார்கள் அவர்களுக்கு எப்படி நன்றிக்கடன் செலுத்துவதோ தெரியவில்லை.

வாழ்க்கையில் நான் கற்க மறந்த, கற்றுக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் இழந்த பல அம்சங்களை இனம்கண்டு வருகின்றேன். முழுமையான வாழ்க்கை ஒன்றை வாழ்வதென்றால் இந்தப் பாடங்கள் மிகவும் அவசியமாக இருக்கும் என்று நம்புகின்றேன். ஒரு வகையில் பார்க்கப் போனால் கொள்கை என்ற ஒன்றைக் கடைப்பிடிக்காமல் வாழவே முடியாது போலிருக்கிறது.

இவற்றை எல்லாம் நானா எழுதுகிறேன் என்று அதிசயமாக இருக்கின்றது. எழுதுவதிலும் ஒரு ஆறுதல். அதைவிட நீங்கள் இந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள ஆர்வம் என்று எழுதியிருந்தீர்கள். அதை நினைத்துத் தான் இதை எழுதினேன். என் உணர்வுகளுக்கும் எண்ணங்களுக்கும் ஒரு வடிகாலாக இக்கடிதம் அமைகின்றது. இதையெல்லாம் வாசிக்க வைப்பதன் மூலம் உங்களுக்குச் சிரமத்தைத் தருகிறேன் என்று நினைக்க வேண்டாம். அதனால் தான் இதுவரைக்கும் அண்ணனையும் மச்சானையும் தவிர யாருடனும் தொடர்பு கொள்ளவில்லை. ஆனால் நீங்களோ நான் அறிந்த இங்குள்ள நண்பர்களுள் குடும்பத்தவராக இருந்தும் ஒரு சிறைக்கைதிக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் செயற்படுகிறீர்கள். உங்கள் கடிதம் எனது குழம்பிய மனதுக்கு ஆறுதலாகவும் இருந்தது

எது எப்படி இருந்தாலும் என்னிடம் நிறையப் பிழைகள் இருக்கத்தான் செய்கிறது. இதை வெளிப்படையாக ஒப்புக் கொள்வதில் எவ்வித மனவருத்தமும் எனக்கில்லை. இனியாவது நல்ல முறையில் நல்ல பாதையில் செல்லுவதற்கு என்னைத் தயார்படுத்திக் கொள்கிறேன். எல்லாவற்றையும் அனுபவமும் பாடமுமாக எடுத்துக் கொள்கிறேன். முதல் கால அனுபவங்களை விட இவை புதியவையாகவும் கடுமையானதாகவும் இருக்கின்றன. அதைக்கற்க நான் கொடுத்த விலை மிக அதிகமாக உள்ளது. இவற்றை நினைக்கும் பொழுது கசப்பாகவும் இருக்கின்றது. அதனால் அதைப்பற்றி நினைப்பதையே தவிர்த்து மூளையை வேறு விதத்தில் பயனுள்ள வழியில் பயன்படுத்த முயன்று கொண்டு இருக்கின்றேன். வாசிப்பு அதற்கு உதவுகின்றது.இனியும் அசட்டுத்தனமாக சிந்தித்து மற்றவர்களுக்கு பிரச்சனைகளை கொடுப்பதைவிட நாட்டுக்குத் திருப்பி அனுப்பினாலும் போகலாம் என்ற முடிவில் இருக்கின்றேன்.

உங்களுக்கு வசதி கிட்டும் போது என்னை வந்து சந்திக்கவும். கடிதங்களும் நூல்களும் தான் என்னை இந்தச் சிறையிலிருந்து வெளியுலகத்தோடு தொடர்பைப் பேண உதவும் ஒரே ஊடகமாக உள்ளன. அத் தொடர்பினைப் பேண உதவும் அனைவருக்கும் என் உளம் நிறைந்த நன்றி.

இப்படிக்கு
அன்புடன் ....................



**சீதனம் ஒரு சமூகக் கொடுமை.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நூல்தேட்டம்

என்.செல்வராஜா

### இலக்கியம்: தமிழ் இலக்கியம்: கவிதை

24. இயேசு பிரான் பற்றிய சுவையான கவிதைகள்



ஆசிரியர்: செ. நாகேந்திரன்
வெளியீடும் பதிப்பும்:
மணிமேகலைப் பிரசுரம்
7, தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை 600017
1வது பதிப்பு, 2001
அச்சுப்பதிவு:
Scripts Offset
Chennai 600094, India
பக்கம், அளவு:
80 பக்கங்கள், 12.5x18.5 சமீ.

கவிஞர் செ.நாகேந்திரனின் நான்காவது நூல். கிறிஸ்தவ தேவாலய ஆராதனைகளின் போது உள்வாங்கிய இறையியல் கருத்துக்களுக்கு கவிதை வடிவம் தந்துள்ளார். (விலை இந்திய ரூபா 18.00)

### இலக்கியம்: தமிழ் இலக்கியம்: கவிதை

25. முகமறியா வீரர்களுக்காக



ஆசிரியர்: மட்டுவில் ஞானகுமாரன்
வெளியீடும் பதிப்பும்:
ஞானம் பதிப்பகம்
Seminar str 2,
49074 Osnabruick,
Germany
1வது பதிப்பு, 2000
அச்சுப்பதிவு:
மணிமேகலைப் பிரசுரம்,
சென்னை 17
பக்கம், அளவு:
112 பக்கங்கள். 12.5x18.5 சமீ.

ஈழவிடுதலைப் போராட்டத்தின் பகைப் புலத்தில் விளைந்த 33 கவிதைகளின் தொகுப்பு. தாயகத்தில் நம் மக்கள் எதிர்நோக்கும் துயரங்களையும் பிரச்சினைகளையும் ஆழமாக, உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தும் கவிதைகள் இவை. (விலை இந்திய ரூபா 23)

### இலக்கியம்: தமிழ் இலக்கியம்: சிறுகதைகள்

26. சொர்ணம்மா: சிறுகதைகள்



ஆசிரியர்: முல்லை பொன். புத்திசிகாமணி
வெளியீடும் பதிப்பும்:
மணிமேகலைப் பிரசுரம்,
7, தணிகாசலம் சாலை,
தி.நகர், சென்னை 17
1வது பதிப்பு, 2000
அச்சுப்பதிவு:
Scripts Offset
Chennai600094, India
பக்கம், அளவு:
260 பக்கங்கள், 12.5x18.5 சமீ.

புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வாழும் ஆசிரியரின் ஆறு சிறுகதைகளின் தொகுதி. அன்றாடம் நாம் காணும் பாத்திரங்களின் வாயிலாக நடைமுறை வாழ்வின் அன்றாட நிகழ்வுகள் விறு விறுப்பான சிறுகதைகளாக விரிந்துள்ளன. (விலை இந்திய ரூபா 50)

### இலக்கியம்: தமிழ் இலக்கியம்: சிறுகதைகள்

27. தெய்வம் பேசுவதில்லை



ஆசிரியர்: தமிழ்மணி ந.பாலேஸ்வரி
வெளியீடும் பதிப்பும்:
காந்தளகம்,
834 அண்ணாசாலை,
சென்னை 600002
1வது பதிப்பு, மார்கழி 2000
அச்சுப்பதிவு:
Kanthalakam,
Chennai600 002, India
பக்கம், அளவு:
278 பக்கங்கள், 12.5x18.5 சமீ.

திருக்கோணமலை, தமிழ்மணி ந.பாலேஸ்வரி அவர்கள் 35 ஆண்டுகளுக்கு மேலாக சிறுகதைகள், நாவல்கள் எழுதி வருகின்றார். அவரது நாவல்கள் 12 இதுவரை வெளிவந்து இருக்கின்றன. அவரது இரண்டாவது சிறுகதைத் தொகுதி இதுவாகும். 1960 - 1980 காலப்பகுதியில் வெளியான சிறுகதைகள். (விலை இந்திய ரூபா 75)

### சமயம்: இந்து சமயம்: சமயப்பெரியார்

*சீதனம் சம்பந்தப்பட்ட திருமணங்களை பகிஸ்கரிப்போம்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நூல்கள்

28. காரைக்கால் அம்மையாரின் வாழ்வும் வாக்கும்



ஆசிரியர்: வித்துவான் க.நடிவேலன்
வெளியீடும் பதிப்பும்:
மணிமேகலைப் பிரசுரம்
7, தணிகாசலம் சாலை,
தியாகராய நகர்,
சென்னை 600017
1வது பதிப்பு, 2000
அச்சுப்பதிவு:
MK Enterprises
Chennai 600 005, India
பக்கம், அளவு:
128 பக்கங்கள், 12.5x18.5 சமீ.

காரைக்கால் அம்மையாரின் வாழ்க்கை வரலாறு தெய்வீக மணம் கமழ வரையப்பட்டு உள்ளது. திருவாலவுடையார் பாசுரத்துக்கும் அம்மையார் பாடல்களுக்கும் முன்னுரையோடு கூடிய பொழிப்புரையும், அம்மையாரின் வாழ்வும் வாக்கும் என்ற ஆய்வுப்பகுதியும் இடம்பெற்றுள்ளது. (விலை இந்திய ரூபா 26.00)

### இலக்கியம்: தமிழ் இலக்கியம்: நாவல்

29. யாகம்




ஆசிரியர்: முல்லை அமுதன்
வெளியீடும் பதிப்பும்:
ரிஷபம் பதிப்பகம்
31/45, இராணி அண்ணாநகர்,
பி.டி.இராஜன் சாலை
சென்னை 600078
1வது பதிப்பு, ஒகஸ்ட் 2000
அச்சுப்பதிவு:
Mani Offset
Chennai 600 05, India
பக்கம், அளவு:
128 பக்கங்கள், 14x21 சமீ.

யாகம் இறுக்கமான தலைப்பு. இனப்பிரச்சினையைச் சுற்றிப் பின்னப்பட்ட கதை. (விலை இந்திய ரூபா 50.00)

### இலக்கியம்: பலவினம்: செவ்வி

30. தமிழ் முழங்கும் வேளையிலே



ஆசிரியர்: ஆ.சி.கந்தராஜா
வெளியீடும் பதிப்பும்:
மித்ர வெளியீடு
1/23 Munro Street,
Eastwood 2122,
Australia
1வது பதிப்பு, நவம்பர் 2000
அச்சுப்பதிவு:
Mitra Arts and creations
375/8-10 Arcot Road,
Chennai600 024, India
பக்கம், அளவு:
192 பக்கங்கள், 12x17.5 சமீ.
ISBN 187- 6626 - 96- 8

சிட்னியில் இருந்து ஒலிபரப்பாகும் தமிழ் முழக்கம் வானொலி நிகழ்ச்சியில் இடம்பெற்ற செவ்விகளின் தொகுப்பு. மாலன், பீர் முகம்மது, ஞானி, சுஜாதா, ஆதி குமணன், நவநீதகிருஷ்ணன், கலைஞர் கருணாநிதி, வை.கோ., கமல்ஹாசன், பிரபஞ்சன், நாகேஷ், மனோரமா சோ. இரா ஜனார்த்தனன் போன்றோரின் நேர்காணல்கள் இடம் பெற்றுள்ளன. (விலை இந்திய ரூபா 60.00)

### இலக்கியம்: தமிழ் இலக்கியம்: திறனாய்வு

31. நானும் எனது நாவல்களும்

ஆசிரியர்: செங்கை ஆழியான்
வெளியீடும் பதிப்பும்:
மல்லிகைப்பந்தல்
201-1/1, ஸ்ரீ கதிரேசன் வீதி,
கொழும்பு 13
1வது பதிப்பு, ஆகஸ்ட் 2000
அச்சுப்பதிவு:
U K Printers
98 A Vivekananda Road
Colombo 13
பக்கம், அளவு:
110 பக்கங்கள், 14x21 சமீ.
ISBN 955-8250-04-x



செங்கை ஆழியானின் படைப்புக்கள் பற்றியும் அவை உருவாகிய பின்னணி பற்றியும் அவரது மீள்பார்வை. சமகால ஈழத்துப் படைப்பிலக்கிய வளர்ச்சி பற்றிய ஒரு வரலாற்று ஆவணமாக மலர்ந்து உள்ளது. (விலை இலங்கை ரூபா 80.00)

Secret of the Mansion
MAULIA SELVARAJAH
2ம் தலைமுறையினரின் எழுத்துலகில் உறுதியாக தன் எழுத்துக்களை பதித்து வரும் செல்வி மௌலியா செல்வராஜாவின் 2வது சிறுவர் நாவல்.
விலை £3.00
(தபால் செலவு உட்பட).

பறை
தொடர்புகளுக்கு
www.parai.no






சீதனம் ஒரு சமூகக் கொடுமை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசம்

சர்வதேச தமிழ் சஞ்சிகை □ இதழ் 7 □ மார்ச் 2002

அட்டைப்படக் கட்டுரைகள்
**6200 தமிழர்கள் அரசில் தஞ்சம்..............05**

**தமிழீழம் கைவிடப்படுகிறது. ...................06**

மருத்துவம்
**நோய்வாய்ப்பட்ட வடக்கு, கிழக்கு.... 02**

பெண்கள்
**புத்தாயிரத்தில் தமிழ்ப் பெண்கள்..... .......07**

மொழி
**வீட்டில் தமிழ், தமிழரோடு தமிழ்..............08**

**தமிங்கிலம் ஏ தமிழ்...................... ........09**

சட்டம்
**வழக்கு 6 வது ஆண்டாக தொடர்கிறது.....11**

மனித உரிமைகள்
**அரசும் புலிகளும் மனித உரிமைகளை மதிக்கவில்லை.....................................13**

அரசியல் விமர்சனம்
**போர் நிறுத்தம்..........................................14**

ஆசிரியர் தலையங்கம்..............................01
இடம்பெயர்ந்தவர்களுக்கு உதவி............04
மனதின் நெருடல்கள்.................................12
தேசிய நூலகம்..........................................16
கவிததைத் தளம்........................................18
சிறையில் ஒரு குரல்.................................20
நூல் தேட்டம்..............................................23



1) 12 ஜனவரி 2002 அன்று கிங்ஸ்பரி உயர் பள்ளியில் இடம்பெற்ற சிவநாயகத்தின் THE PEN AND THE GUN நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட நூல் ஆர்வலர்களில் ஒரு பகுதியினர்.



2) 14 ஜனவரி தைப்பொங்கல் தினத்தன்று ஈஸ்ற்ஹாம் High Street North ல் இடம்பெற்ற பொங்கல் நிகழ்ச்சியின் ஒரு காட்சி.

www.tamilarangam.net

புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் சமூக, கலாச்சார, அரசியல், பொருளாதார விடயங்களைத் தாங்கி வரும்

# தேசம்

## தேசத்தின் சந்தாதாரர் ஆகுங்கள்!!!

( சந்தா : 6 இதழ்களுக்கு £10 அல்லது EUR 20 )

Thesam, P O Box 35806, London, E11 3JX - Tel : (00 44 ) (0) 79 0985 2418

தேசம் சஞ்சிகையின் ஆதரவில்
இலவசப் பயிற்சி முகாம்

## குறும் - விவரணப் படங்ள்

சிந்தனையில் இருந்து படமாக்குவதற்கு தேவையான அனைத்து அடிப்படை அம்சங்களும் கற்பிக்கப்படும். 20 பேர் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். ஆர்வம் உள்ளவர்கள் தேசம் சஞ்சிகையுடன் தொடர்பு கொள்ளவும்.

காலம் : 30 - 31 மார்ச் 2002

தொடர்புகளுக்கு : த ஜெயபாலன்
020 8279 0354
079 0985 2418

## கானமும் காட்சியும்

கனடிய தமிழ் கலைஞர்கள் வழங்கும் அற்புதமான கலை நிகழ்ச்சி.

யூன் மாதத்தில்
விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படும்.

தொடர்புகளுக்கு
சுரேஸ் - 079 0047 7860

கருத்தரங்கு

## புலம்பெயர் தேசத்தில்

# தமிழ் ஊடகங்கள்

இக்கருத்தரங்கு யூன் மாதம் இடம்பெற ஒழுங்கு செய்யப்பட்டு வருகிறது.
மேலதிக விபரங்களுக்கு தேசம் சஞ்சிகையுடன் தொடர்பு கொள்ளவும்.